JL
Nm 2/11, N42TK
N43.5.1-2
145384

# தமிழ்க் கலை

(திங்கள் வெளியீடு)

ஆசிரியர் : அ. மு. பரமசிவானந்தம்

விரியும் அறிவு நிலை நாட்டுவீர் - அங்கு
வீழும் சிறுமைகளை ஓட்டுவீர் — பாரதி.

கலை - 5 1—7—'47 சர்வசித்து ஆனி நூல் - 1

பொருளடக்கம்

| | பக்கம் |
|---|---|
| விழிப்பு ... ... | 3 |
| வழிகாட்டுவார்களா? ... ... | 6 |
| பார்க்கப் பாரதி இல்லையே — 'கண்ட கண்' | 9 |
| பண்டைத் தமிழர் வழக்க வொழுக்கங்கள் — துரை அரங்கனார் | 13 |
| விடுதலையா? — மு. வ. ... | 19 |
| கலையின் நிலை — அன்பழகன் ... | 24 |
| காலன் வருகை — குருசாமி ... | 31 |
| கன்னட நாட்டில் கலை வளர்ச்சி — 'தமிழன்' | 33 |
| இவள் யார்? — சஞ்சீவி ... | 35 |

இதில் வரும் பெயர்கள் கற்பனைப் பெயர்களே.

PALAYAKAT COY., LTD.
MADRAS. MADRAS.

145384

TRADE MARK

யாண காலத்திற்காக
ஸ்பெஷலாய் தருவித்திருக்கும்

# பெங்களூர் - பெனரஸ் - காஞ்சீபுரம்

*

# பட்டு சேலைகளை

*

செலக்ஷன் செய்வதற்கு முந்துங்கள்:
அழகான பார்டர்கள்! புதுமாதிரியான கலர்கள்!!

## "சங்கு மார்க்கு"

கைலிகள், கர்ச்சீப்புகள் உழைப்புக்கும்
உறுதிக்கும் உத்தரவாதமானவை

# பீதாம்பர மாளிகை

**தி மதராஸ் பளயக்காட் கம்பெனி லிமிடெட்**
3-4, அம்மன் சன்னதி, மதுரை
தலைமை ஆபீஸ்: 31, அரண்மனைக்காரன் தெரு, மதராஸ்

# விழிப்பு

தமிழ் நாடு தனி நாடாக வேண்டியதற்கான நற்குறிகள் தோன்றிவிட்டன. இந்திய நாடு அடிமைத் தளையிலிருந்து வெளியேறுங்காலம் வந்து விட்டது. அனைத்துலகும் ஆளலாம் என்று பேசும் — பேசிய ஆங்கிலர் இந்திய நாட்டை விட்டு நடந்து செல்வதற்கு நாளும் குறித்து விட்டனர். தம் நாட்டைத் தாமே ஆளப்போகிறோம் என்ற மகிழ்ச்சிப் பெருக்கால் அதற்காக அடைந்த அனைத்து அல்லலையும் மறந்து மக்கள் விழாக்கொண்டாடும் நாள் அண்மையில் உள்ளது. மக்களினம் இன்பத்தில் இயைந்து, எலோரும் ஓர் குலம், எல்லோரும் ஓர் இனம் எல்லோரும் இந்நாட்டு மன்னர் என்ற எண்ணத்தில் வாழுங்காலம் வந்துவிட்டது. ஆளும் நாடு அடங்கும் நாடு என்று வேறுபாடு இல்லாத இன்ப வாழ்வு எழுந்து விட்டது. இந்திய நாட்டுக்கு உரிமை வழங்கும் நாள் உறுதி செய்யப்பட்டுள்ளது. உரிமை இந்தியாவில் - உரிமைத் தமிழகம் யாருக்கும் தலைவணங்கா வகையில் - தனி உரிமை நாடாக - தன் அரசியலைத்தானே அமைத்து நடத்தும் வகைக்கு வழி கோலி வருகின்றது. இந்த இனிய நாளில் இன்று தமிழ்க்கலை மீண்டும் தமிழர்கையில் தவழத் தொடங்குகின்றது. தமிழ்க்கலைக்கு மறுமலர்ச்சி காணத்தமிழகம் முற்பட்டது. தமிழர் உள்ளங்களெல்லாம் - தமிழர் இல்லங்களெல்லாம் 'கலையே' தமிழ்க்கலையே வருகவென வரவேற்கத் தொடங்கிவிட்டன. இதோ முதல் இதழ் உங்கள் மலர் முகங்களுக்கு முன் நிற்கின்றது!

அன்று நாடெங்கும் அல்லல் நிறைந்திருந்தது. ஆளும் ஆங்கிலேயர் என்று இந்திய நாட்டை விடுவோமோ என்று ஏங்கினர். நாடு முழுதும் படைதிரட்டத் தொடங்கினர். ஜப்பான் ஒவ்வொன்றாக நாடுகளைத் தன் வசப்படுத்தி, பர்மாவையும் பிடித்துக் கொண்டு, அந்தமானையும் தாண்டி இந்தியாவில்

கால் வைக்க இடம்பார்த்துக் கொண்டிருந்த நாள் அது. சென்னைவாழ் மக்களெல்லாம் செல்லும் இடமறியது சென்னையைக் காலியாக்கி ஊர் தோறும் ஓடி உழன்ற காலம் அது. ஜப்பானிய குண்டுகள் இந்தியமண்ணில் விழுந்து மக்களைப் பயமுறுத்திய காலம் அது. ஆம்; அந்த 1942ம் ஆண்டுத் தொடக்கத்தே தான் காஞ்சியிலிருந்து நான்கு ஆண்டுகள் வெளிவந்து பணியாற்றிக் கொண்டிருந்த 'தமிழ்க்கலை' நின்றது. போர்க் காரணமும், மக்கள் அல்லலும், தாள் கிடைக்காத தடையும், பிறவும் கலையை அன்று தடைசெய்தன. அந்த நாள் கழிந்தது.

இன்று போர் நின்று அமைதி நிலவுகின்றது. வருங் காலத்தில் உலகை உயர்வுடையதாகச் செய்ய வேண்டுமென்று வல்லரசுகளெல்லாம் நாடுதொறும் கூடி முடிபு காண முன்னிற்கின்றன. போர் முரசு இன்றியே - புதுமையான வழியில் இந்தியநாடு விடுதலை வாயிலில் புகுந்து விட்டது. ஆங்கில ஏகாதிபத்தியம் தானே முன்னின்று வெளியேற்றத்திற்கு நாள் குறித்து அதற்கு ஆவனவும் விரைந்துசெய்ய முற்பட்டுவிட்டது. இந்திய நாட்டுத் தலைவர்களும் மக்களும் தாம் விரும்பியபடி விடுதலையை இந்தியா பெற்றுவிட்டது என்று மகிழ்ந்து நிற்கின்றனர். விடுதலை இந்தியாவில் கலை, நாகரிகம், மொழி, வாழ்க்கைமுறை இவற்றை ஒட்டி நாடுகள் தனித்தனியாகப் பிரிந்து தத்தம் கலைவழி-மொழி வழி - பண்பாட்டின் வழித் தத்தமது அரசியலை - அரசியல் முறையை ஆக்கிக்கொள்ள அணிவகுத்து ஆவன செய்ய முற்பட்டுவிட்டன. தமிழர், தம் நாட்டைக் கலைவழி, மொழிவழி ஒன்றுபடுத்தி ஒப்பற்ற தன்னரசு காண முற்பட்டு விட்டனர். வேங்கடம் குமரி இடைவிரிந்த தமிழகத்தை இன்றுள்ள சிதறும் நிலையற்றுச் சேரும் நிலையில் காண மக்கள் முன்னிற்கின்றனர். ஆக்க வேலைகளும் தொடங்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு பிறநாடுகளுக்கு வழி காட்டியாகும் வழியில் - வாழும் வகையை வகுக்கும் முறையில் பணியாற்றத் தொடங்குகின்றது. ஆம்! இந்த மகிழ்ச்சி நாளில் 'தமிழ்க்கலை' தமிழர் இடையில் மறுமலர்ச்சியாக வெளிவருகின்றது.

தெள்ளிய தென்றலும், தெளிந்த ஊற்றுநீரும், வளமார்ந்த மலைவளனும், ஆழ்ந்த கடல்வளனும் அழகுற அமைந்த தமிழ்நாட்டை அன்றும் புலவர் பாடினர் - இன்றும் புலவர் பாடுகின்றனர். பிறநாட்டைத் தன்னடிப்படுத்தி வாழ்ந்த அன்றையநாளிலே புலவர் இதன் ஏற்றத்தைப்பாடி இன்புற்றனர். நாடு நலன் நிறைந்து நின்றது. இடையில் ஏற்பட்ட பல்வேறு மாறுபாடுகள் நாட்டை நலியுறுத்தின. உண்ண உணவுக்கும் உடுக்க உடைக்கும் கூடப் பிறநாட்டை நோக்கி நிற்க வேண்டிய நிலை இன்று தமிழ் நாட்டுக்கு ஏற்பட்டு விட்டது. இதைப்பாடும் புலவர் உள்ளத்தே மகிழ்ச்சியேது? உள்ளக் கனல் - உள்ளத்தின் வெதுப்பு இன்றைய கவியின் வாக்கில் எதிரொலிக்கின்றது. கலையிலும், மொழியிலும் பொருளாதாரத்திலும், ஏன் வாழ்க்கை முறையிலும்கூட அன்னியருக்கு இன்று அடிமையாகி விட்டான் தமிழன். அதன் பலனையும் அவன் அனுபவியாது இல்லை. ஆம்! அவனது வாட்டம் எல்லையற்றதாகி விட்டது.

உறங்கிய தமிழன் விழித்துக் கொண்டான். பலவகையில் நாட்டைச் சுரண்டுவோர் நடுங்கும் நிலையில் கலையும் விழிப்புற்றது. இனி, தமிழினம் ஒன்று சேரும் என்ற உறுதி மக்கள் மனத்தில் பதிந்துவிட்டது. மொழியில், கலையில், நாகரிகத்தில் - பண்பாட்டில் - வாழ்க்கை முறையில் ஒருவருக்கும் அடி பாகமாட்டோம் என்று ஒவ்வொரு அறிவறிந்த தமிழன் உள்ளமும் எண்ணுகிறது - நா பேசுகிறது. அவன் செயலாற்ற முற்பட்டு விட்டான். தமிழர் சேனை திரள்கின்றது தாழ்ந்த தமிழகத்தைத் தலைதூக்க! ஆம்! இந்த மகிழ்ச்சி விழாவில் 'தமிழ்க் கலை' பங்கெடுத்துக் கொள்ளுகின்றது. அருமைத் தமிழர் இக்கலையையேற்று ஆதரிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

வாழ்க தமிழகம்! வாழ்க தமிழினம்!

# வழி காட்டுவார்களா?

உலக நாடுகளெல்லாம் தம் தம் வகையில் தனித்தனியே வளம் பெற்றுவருகின்றன. ஒவ்வொரு நாடும் அடிமைத்தளையிலிருந்துமீண்டும் தலை நிமிர வேண்டிய வழிகளில் பாடுபடுகின்றது. அடக்கி வைத்திருந்த ஆளும் கூட்டமும் சிறிது சிறிதாகத் தனது பிடியைத் தளர்த்திவிட்டுக்கொண்டு வருகின்றது. நாட்டுப்பற்றும் இனப்பற்றும் உண்மையில் அதிகமாகிக் கொண்டே வருகின்றன. அடிமை நாடாயினும், ஆளும் நாடாயினும் எல்லாம் ஒரே துறையில்—தம் நாட்டு முன்னேற்றத் துறையில் கருத்திருத்தி அதற்கு ஆவனவற்றை ஆக்கமுறப்பட்டுவிட்டன. அரசியல், பொருளாதாரம் முதலியவற்றில் ஒவ்வொரு நாடும் கருத்திருத்துகின்றது.

இந்திய நாட்டு விடுதலை வாயிலில் நிற்கின்றோம். சேர்ந்த இந்தியா பிளவுபட்ட இந்தியாவாகி விட்டது. இந்த உபகண்டத்தில் உள்ள ஒவ்வொரு சிறு நாடும் - சிறு இனமும் தத்தமக்கு எனத் தனி அரசும் தனி உரிமையும் வேண்டும் என்று உழைக்க முற்பட்டுவிட்டன. இலட்சக் கணக்கில் இருக்கும் இனமக்கள்கூடத் தங்களுக்குத் தனி நாடு - உரிமை - தனி அரசு வேண்டும் என்று கூறுகின்றனர். ஒவ்வொருவருடைய பேச்சும் - விருப்பமும் கவனிக்கப்படுகின்றன. அவ்வவ்வினத்தார் தத்தமக்குள்ள வேறுபாட்டை மறந்து இன அரசை - தனிநாட்டைக் காணமுற்படுகின்றனர். இது இந்தியநாடு முழுவதும் காணும் நிகழ்ச்சி !

ஆனால் ! தமிழ் நாட்டில் காண்பதென்ன ? தமிழினம் பண்டைப் பெருமை வாய்ந்தது என்று வாயாரப் பேசுவதொன்றைத் தவிர வேறு வகையில் செயலாற்றுவோர் யார் ? பண்டைப் பெருமை பேசிப் பயன் என்ன ? வருங்கால உலகில் - வருங்கால இந்தியாவில் - தமிழ் நாட்டின் நிலை என்ன ? தமிழன் வாழ்வு - பொருளாதாரம் முதலியன எதன் பேரில் அமைக்கப்படும் என்பதை எண்ணல் வேண்டும். அதற்கும் காலம் இல்லை. காலம் நமக்கென நிற்காது விரைந்து முன்னேறுகின்றது. அற்புத நிகழ்ச்சிகளோ என ஐயுறும்படி செயல்கள் விரைந்து நடைபெறுகின்றன. ஆனால் தமிழகம் தலை தூக்க வழிகாட்டுவார் யார் ?

தமிழ்நாட்டில் பல்வேறு பிரிவுகள்-வேறுபாடுகள் - கட்சிகள் தலை தூக்கி நிற்கின்றன. தமிழ் நாடு வேண்டும் என்பார் ஒருபுறம்-திராவிட நாடுஎன்பார் மற்றொரு புறம்-என்றும் 'A' தொகுதியில் இணைந்து நிற்போம் என்பார் வேறொருபுறம். இத்தனைக்கு மேலாக இன்னும் சில கருத்துக்கள்-உருப்பெறா வகையில். கட்சிப்போரால் வேறுபாடு - சாதி

யின் போரால் வேறுபாடு இன்னும் எத்தனையோ வகையில்! கட்சிக்குள் கட்சி - சாதிக்குள் சாதி - எண்ண முடியாதவகையில்! எழுதமுடியாத வகையில் தமிழ்நாடு சிதைந்து கிடைக்கிறது. எதிர்க் கட்சிக்காரன் எது சொன்னாலும் தவறு என்ற மனப்பான்மை - தன் கட்சிக்காரன் எது செய்தாலும் நேர்மை என்ற எண்ணம் - எங்கும் பதவி வேட்டை-லஞ்சக் கொடுமை - இன்னும் பிற - இத்துணைக் கொடுமைகளுக் கிடையில் தமிழகம் அல்லல்பட்டுக் கிடக்கின்றது!

இன்றைய நிலை என்றும் இருக்க வேண்டும் என்று மக்கள் நினைப்பார்களாயின் அத்துடன் தமிழ் இனம் அடியோடு மடிந்தது என பதே பொருளாகும். தமிழ் நாட்டில் போதிய கல்வி இல்லை. பொது மக்கள் எடுப்பார் கைப்பிள்ளையாக ஆகின்றார்கள். உள்ளது இன்னது என்று அறிய அவர்கட்குப் போதிய நேரமில்லை. சிந்தையைத் தூண்டும் செம்மை இல்லை. இந்த நிலையில் நாட்டுத் தலைவர்கள்தாம் அவர்கட்கு வழிகாட்ட வேண்டும். காட்டுவார்களா?

ஒவ்வொரு கட்சியும் நாட்டுக்கு ஒவ்வொரு வகையில் நன்மை செய்ய வேண்டும் என்ற குறிக்கோளில் தான் ஏற்பட்டது. வளரும் காலத்து அவ்வக்கட்சியில் ஆட்சி செலுத்துவோர் மனப்போக்கிற்கு ஏற்ப மாறியும் திரிந்தும் பிறழ்ந்தும் உயர்ந்தும் அது வளர்ந்து வரும். ஒரு கட்சி செய்வது எல்லாம் நல்லது என்றோ - அன்றி எல்லாம் தீயது என்றோ சொல்ல முடியாது.

'எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு'

'எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு'

என்ற இரண்டு அறிவுக் குறள்களையும் தமிழர் மறந்தனர். தமிழ் நாட்டுத் தலைவர் மறந்தனர். எனவே நாட்டில் அல்லலும் அவதியும் அளவுக்கு மீறி வளர்ந்து விட்டன. இன்றும் காலம் மிஞ்சி விடவில்லை. கருத்து வேண்டும்.

பெரும்பாலான மக்கள் தமிழ் நாட்டைத் தனி நாடாகக் காண வேண்டும் என விரைகின்றனர். தலைவர்தம் கருத்தும் இதில் ஒன்று படும் என்பது உறுதி. அவர்கள் தத்தம் கட்சி வேறுபாடுகளை மறந்து அனைவரும் தமிழ் என்ற கட்டால் ஒன்று படுத்தப்பட்டவர்கள் என்பதை உணர்ந்து ஒன்றிய உளத்துடன் பணியாற்ற முற்படுவார்களா? பட்டம் பதவிக்காக, அவற்றின் மூலம் பயன் பெறுவதற்காகத் தான் தலைமைப்பதவி இருக்கின்றது என்று எண்ணுவார்களானால் அவர்கள் எண்ணம் ஓரளவு வெற்றி தரினும் தரலாம். ஆனால் அவ்வெண்ணம் நாட்டை நசுக்கும் பொல்லா எண்ணம் என்பதை அவர்கள் உணர

வேண்டும். உணர்ந்திருக்கிறார்கள். உளம் ஒன்றுபடவில்லை. உளம் ஒன்றுபட்டால் உயரும் தமிழகம்.

ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு உயர்நலம் உண்டு என்பதை ஓர்ந்து தத்தம்மிடம் உள்ள குறைபாட்டை அறிந்து இன்று தமிழ் நாட்டுத் தலைவர்கள் ஒன்றுபட வேண்டும். அவர்கள் பிணிக்கப்பட்டிருப்பது தமிழ் ஒன்றினால், அவர்கள் வாழ்வது தமிழ் நாட்டில்; அவர்கள் பெறும் செல்வம் பயன் நலம் அனைத்தும் தமிழ் நாட்டு மக்கள் உழைப்பால். ஆகவே வேறு எத்துறையில் மாறுபடினும் தமிழர் நலங்காண, தமிழ் நாட்டைத் தலை சிறந்த நாடாக்க எல்லாக் கட்சித் தலைவர்களும் ஒன்றுபட வேண்டும். ஒன்று பட்டு அறியா ஏழை மக்களுக்கு வழிகாட்ட வேண்டும். கட்சித் தலைவர்களெல்லாம் ஒன்று கூடிப் பேசவேண்டும். அவர்கள் உள்ளத்தில் கட்சி வேறுபாட்டு எண்ணமே இருத்தலாகாது. மனங் கலந்து பேசவேண்டும். ஆங்கிலப் பேரறிஞன் ரஸ்கின் கூறியவாறு தலைகள் ஒன்றுபட்டால் போதாது, உளங்கள் ஒன்றுபடவேண்டும். குற்றம் இருப்பின் நீக்கி அனைவரிடமும் உள்ள குணங்கள் வரவேற்கப்பட வேண்டும். அவர்கள் எண்ணமெல்லாம் அனைத்தினுக்கும் மேலாக தமிழ் - தமிழ்நாடு - தமிழர் என்பதில் அமைய வேண்டும். கட்சிக்குள் கட்சி என்ற குறுகிய மனப்பான்மை மடிய வேண்டும். மடிய வழியுண்டா? உண்டு. பிறகு காண்போம். தலைவர்கள் வழிகாட்டவேண்டும் என்பது என் வேண்டுகோள். வழி காட்டுவார்களா?

---

அடுத்த இதழில் :

**"வேளாண்மை நிதி"**

— இராவ் பகதூர் - டாக்டர் - B. V. நாராயணசாமி நாயுடு அவர்கள், M.A., Ph.D., B.Com., *Bar.-at-Law.*

**"இலக்கியக் கட்டுரை"**

— திரு. ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள், B.A., B.L.

**"ஏது இசை"**

— வித்துவான் - அன்பு கணபதி அவர்கள்

# பார்க்கப் பாரதி இல்லையே

(கண்ட கண்)

16-6-47 காலை நண்பர்களும் நானும் உறக்கம் விட்டெழுந்தோம். சிற்றுண்டி உட்கொண்டோம். உலாவச் சென்றோம். வேடிக்கையாக அல்ல, வேண்டியவற்றைப் பார்க்க. ஆம்! இன்றைய இந்திய நாட்டுக்கு வேண்டியவை, இனிவரும் உலகத்து வேண்டியவை, பிறநாட்டோடு சரி நிகர் சமானமாக வாழ வைக்கும் தன்மை வாய்ந்தவை இத்தகைய உயரியவற்றைக் காணச் சென்றோம்.

இன்னும் சிறிது நேரத்திற்குள் கனகசபைக் காட்சி நாம் காணப் போகிறோம் என்றேன் நான். என் நண்பர் ஒருவர் திரும்பிப்பார்த்து என்னை நோக்கிச் சிரித்தார். கனகசபைக்கு ஐந்நூறு கல்லுக்கு அப்பாலிருந்து கொண்டு கனகசபையைக் காண்பதாகச் சொல்லுகிறீர்களே உங்களுக்கென்ன பயித்தியமா என்றார். யாருக்குப் பயித்தியம் என்பது எளிதில் சிறிதுநேரத்தில் தெரியும் என்றேன். குறித்த இடத்திற்குச் சென்றோம். காட்சியைக் கண்ட நண்பர் தன்னை மறந்தவராய் இது கனக சபையினும் மேலானது என்று வியந்து என்னை அப்படியே தழுவிக்கொண்டார். அக்கனகசபையிலும் அதைச் சுற்றியுள்ளவற்றிலும் அன்றெலாம் நாங்கள் எங்களை மறந்து இன்பத்தில் மூழ்கி இருந்தோம். தன்னைமறந் தின்புற வெண்ணிலாவைத் தந்திரம் வேண்டா நிலையில் நாங்கள் எங்களை மறந்திருந்தோம்!

நாடு நலம்பெற வேண்டுமானால் பொருளாதார நிலை சீர்திருத்தமுறவேண்டும். செல்வவளம் கொழிக்கவேண்டும். செல்வம் நிலைபெற நாட்டில் வளரவேண்டுவது கைத்தொழிலே. இராட்டையால் நாட்டைக் காக்கமுடியும் என்பது இன்று மாறி, எங்கும் நெசவுச்சாலைகள் (Mills) ஏற்பட்டுவிட்டன. சென்னை மாகாணத்திலும்கூட பல்வேறு எதிர்ப்புக்களுக்கு இடையே தொழில் வளர்ச்சிக்கு இடம் இருக்கிறது. ஆனால் அளவு சிறிதாக இருக்கலாம்.

‘ ஆயுதம் செய்வோம் - நல்ல - காகிதம் செய்வோம்
ஆலைகள் வைப்போம் - கல்விச் - சாலைகள் வைப்போம்
ஓயுதல் செய்யோம் - தலை - சாயுதல் செய்யோம்
உண்மைகள் சொல்வோம் - பல - வண்மைகள் செய்வோம் ’

என்று அன்று பாரதி கண்ட கனவு நனவாகும் நாள் அண்மையில் வந்துவிட்டது. உலகை ஆளும் வல்லரசுகள் உயர்ந்தது எதனால். செல்வம் கொழிக்கும் அமெரிக்கா சிறப்பது எதனால் - கைத்தொழிலால் - ஆலைகளால் - விஞ்ஞானத்தால்.

உலகெலாம் விஞ்ஞானத்தால் விளக்கமுறும்போது, நம்நாடு உறங்கல் நீதியாகுமா ? வடநாடும் தன் வாணிப வளனைச் சிறப்புறச் செய்கிறது. தென்னாடு மட்டும் வீணில் உறங்குவானேன் என்றெல்லாம் சிந்தை எண்ணுவதுண்டு. தென்னாட்டில் உள்ள இரு தனி அரசுகள் (States) தம்தம் நாட்டில் தொழில் வளர்ச்சியைக் கண்ணுங் கருத்துமாக வளர்ப்பது கண்டு மகிழ்ச்சி அடையவேண்டியதே ! ஆம் அடைந்தோம் அன்று. அந்த நாள் 16-6-47.

பத்ராவதி மக்கள் மேலே காட்டிய பாரதியார் பாட்டுக்கு இலக்காகி நிற்கிறார்கள். பத்ராவதி மைசூர் ஆட்சியில் உள்ள ஒரு சிற்றூர். அங்கு பாரதியின் கனவு நனவாக்கப்படுகிறது. அது கன்னட நாடாயினும் தமிழ்க் கவியின் கனவை நனவாக்கும் நல்லவர்களெல்லாம் தமிழர்களே யாவர். அங்கே இரும்புத் தொழிற்சாலை உண்டு. கல்லை இரும்பாக்கும் காட்சி காணத்தக்கது. அதையே கனகசபை என்று மேலே காட்டினேன். பத்ராநதிக்கரையில் சிறப்பார்ந்த செல்வ நிலையில் அமைந்த பத்ராவதியில் இரும்பை உண்டாக்குகிறார்கள். இரும்பினால் ஆயுதம் செய்கிறார்கள். உருக்கிரும்பு பொன் எனப் பொலிகின்றது. இரவு பகலற்ற இடம் கனகசபையன்றோ ! ஆம் அந்த இரவு பகல் கிடையாது. அறுகால பூசை உண்டு. நான்கு மணிக்கு ஒருமுறை - நாளைக்கு ஆறுமுறை கனகசபைக் காட்சியைக் காணலாம். கல் நீராக உருகிப் பின் இரும்பாக மாறும் காட்சி அது. கல்லுருக்கும் இயந்திரம் இருபத்துநான்கு மணி நேரமும் வேலை செய்கிறது. உருகிப் பக்குவப்பட நான்கு மணி நேரங்கள். பிறகு ஊற்றுப் பெருக்கு வெள்ளமெனப் பள்ளங்களில் பாய்ந்து இறுகும் காட்சி. அப்பப்பா ! அக்கனகசபை அப்போது உண்மையில் பொன் மயமாக விளங்குகின்றது. பேருக்கு அல்ல - பேச்சுக்கு அல்ல - உண்மையில் நாளொன்றுக்கு ஆறுமுறை அங்கு கனகசபைக் காட்சி ! கண்டோர் அறிவர் ! தமிழர் அனைவரும் அதைக் காணவேண்டும் என்பது என் அவா !

நான் இதை எழுதும் காலத்து என் வீட்டுவாசலில் பிச்சைக்காரன் 'கனகசபாபதி தரிசனம் ஒருநாள், கண்டால் கலிதீரும்' என்று பாடினான். ஆம். இக்கனகசபையைக் கண்டால் - இதன் காட்சி மக்கள் கலியைத் தீர்க்கும். உழைக்க வழி நல்கும். உயர்ந்த பொருள்களை, நமக்கு வேண்டிய பொருள்களை நாமே ஆக்கிக்கொள்ள வழி காட்டும். தலைவணங்கா நிலையிலே பாரதியின் பாட்டைப்பாட வழி பிறக்கும். தமிழ்நாட்டுக் கலி நீங்கும் ! காணவரும் சகத்திரே என அழைக்கின்றேன்.

நாட்டுமக்கள் ஊர்தோறும் சென்று இறைவனைப் பாடி வரம்பெற யாத்திரை செல்கின்றனர். இன்றைய அரசாங்கம் - பிறநாடுகளுக்கு யாத்திரை செல்ல அறிஞர்களை அனுப்புகின்றது. அவ்வந்நாடுகளுக்குச் சென்று அங்கங்குள்ள விஞ்ஞான வளர்ச்சி - கைத்தொழில் வளர்ச்சி - கலைவளர்ச்சி ஆகியவற்றைக் கண்டு அவற்றை உட்கொண்டு நாடு வந்து தொழில் வளர்க்க வழிகள் எவை எனக் கண்டு அவற்றை மேற்கொள்ளுகிறது. அதற்கெனப் பணத்தையும் வாரி விடுகின்றது. செல்வமுள்ளவர்கள் - அரசாங்க உதவிபெறக் கூடியவர்கள் அயல்நாடு செல்லட்டும். தமிழ்நாட்டு மக்கள் சற்றும் தயக்கமடையாது ஒருமுறையாயினும் - பத்ராவதிக்கு - ஆம் - கனகசபைக்கு யாத்திரை சென்று வரட்டும். சென்றுவந்த பிறகு நான் சொல்வது சரியா தவறா என்று முடிவு கட்டட்டும்.

இன்று நாடு கைத்தொழிலில் வளம்பெற்றதாக வேண்டும். இன்று உறங்கினால் பிறகு என்றும் தமிழன் தலைதூக்க முடியாது. தமிழினம் உறங்கிக் காலம் கழிக்கும் இனமன்று. கன்னட நாட்டிலே மேலேகண்ட இப்பெரும் பணியை ஆற்றுகின்ற மக்களில் பெரும்பாலோர் தமிழ் மக்களே! அவர்கள் ஆற்றும் அரும்பணியை நேரில் சென்று கண்டால் ஒழிய எழுத்தால் விளக்குவதென்பது இயலாததொன்று. மேலே பாடிய பாரதியார் பாட்டு அங்கு மெய்யாக்கப் படுகின்றது. அவர்கள் பணி ஆலைகளிலே! அங்கே இரும்பாலை உண்டு. இரும்புருக்குக்குப் பின் அரிய சாமான்களை வேறொரு சாலையில் விதவிதமாகச் செய்கின்றனர். அடுத்துள்ளது காகிதச்சாலை - மூங்கில் ஒரு கோடியில் இடப்படுகிறது. மறுகோடியில் அழகியதாள் எடுக்கப்படுகின்றது. ஆகவே அங்கு பாரதியின் முன்பகுதி,

‘ ஆயுதம் செய்வோம் நல்ல காகிதம் செய்வோம்
ஆலைகள் வைப்போம் ’


என்ற சொற்கள் மெய்யாக்கப்படுகின்றன. பின் பகுதியும் அவ்வாறே! ஆலையில் உழைக்கும் மக்கள் அன்னைத் தமிழை மறந்துவிடவில்லை. தமிழுக்குக் கல்விச்சாலைகள் அங்கே உண்டு. கன்னட நாட்டில் தமிழ்க்கலை வளர்க்கின்றார்கள். கல்விச்சாலையன்றிக் கலைக்கழகமும் உண்டு. அதன் ஆண்டுவிழா 15-6-47 ல் சிறப்பாக நடைபெற்றது. (இதன் விரிவு மற்றொருபுறம் காண்க) ஆகவே கல்விச் சாலைகள் வைப்போம் என்ற தொடரும் மெய்ப்பிக்கப்படுகின்றது.

ஆலையில் உள்ளவருக்கு - தொழிற்சாலையில் உள்ளவருக்கு ஓய்வு ஏது? அங்கு இராப்பகல் அற்று இருபத்துநான்கு மணி நேரமும் பணியாற்றி ‘ இராப்பகல் அற்ற இடத்தே இருக்கை எளிதல்லவே ’ என்ற சொல்லையும் இல்லையாக்கி வாழும் மக்கள் இடையிலே - நாட்டிடையிலே ஓய்வு ஏது! தலை சாய்க்கநேரமேது? இடமேது ’ அவர்

களுடை மனமெல்லாம் - செயலெல்லாம் உணர்ச்சியிலே - செயலிலே - சிந்தனையிலே அன்றோ திளைத்திருக்கும். அத்தகைய மன அமைப்பிலே 'மற்றவன் தாழத் தான் வாழ' என்று எண்ண நேரமும் இல்லாத வாழ்க்கை முறையிலே உண்மையல்லாது பிறவற்றைக் காணமுடியுமா! உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாயின் அவர்கள் ஆற்றும் செயலெல்லாம் வண்மையாக முடியுமன்றோ! அவர்கள் வண்மை நம்நாட்டுக்குத் தாள்கள் நல்குகின்றது. இரும்புக்குழாய்கள் - கம்பிகள் - ஆணிகள் - இன்னும் பலவான இரும்புச் சாமான்களை நல்குகின்றது. வீடமைக்க சாலை அமைக்க 'சிமிட்டி' நல்குகின்றது. இன்னும் இவற்றால் ஆகும் பொருள்கள் எவை எவையோ அவற்றையெல்லாம் வாரி வழங்குகின்றது. இன்று பாரதி இருந்து பத்ராவதி சென்று பார்ப்பானாயின் அவன் உள்ளம்பூரிக்கும்-உறுதி பொங்கும் - ஆனந்தக் கூத்தாடி அவன் பாடிய அந்தப் பாட்டைப் பலமுறை பாடுவான். ஆனால் பார்க்கப் பாரதி இல்லையே!

---

குறிப்பு:—பத்ராவதி தொழிற்சாலையின் அமைப்புக்கள், நடைமுறைகள் பிறசிறப்புக்கள் அனைத்தும் படவிளக்கத்துடன் உரியவர் உத்தரவுபெற்று கலையில் வெளிவரும்.



# The Morley Shoe Mart

**CHROME LEATHER WORKS**

Manufacturers of High Class and Stylish Shoes
Slippers, Sandals, Suit Cases and
Other Leather Goods

*10, BROADWAY, MADRAS*

# பண்டைத் தமிழர் வழக்க வொழுக்கங்கள்

(வித்துவான், திரு. மொ. அ. துரை அரங்கனர், B. O. L.)

**முன்னுரை :**

தற்காலத் தமிழர் வழக்க வொழுக்கங்கள் பண்டைத் தமிழர் வழக்க வொழுக்கங்களிலிருந்து பெரும்பான்மையாக மாறுபட்டுள்ளன; தமிழர் அல்லாத பிறர் வழக்க வொழுக்கங்களோடு கலந்துள்ளன. தமிழ் உள்ளமும், தமி ழறிவும், தமிழ் நாட்டுப் பற்றும் உடைய தமிழர்கள் தமிழ் மக்களிடையே பண்டைத் தமிழர் வழக்க வொழுக்கங்களை நிலை நாட்ட இன்று பெரு முயற்சி செய்து வருகின்றனர். இவர்களுடைய உழைப்பினைப் பயன் படுத்திக் கொள்ளத் தமிழருள் பலர் முன்வர வில்லை. சில தலைமுறைகளாகத் தம் முன்னோர் மேற்கொண்டு ஒழுகி வந்த வழியே தாமும் மேற்கொண்டு ஒழுகி வரும் வழக்கங்களை மாற்றிக் கொள்ள அவருக்குத் தம் நெஞ்சம் இடம் தாராமையே அதற்குக் காரணம் என்னலாம். மேலும், தமிழருள் பெரும் பான்மை யோர் எழுத் தறிவும் பெறாதவராய் உள்ளனர். அப்படி எழுதப் படிக்கத் தெரிந்தவருள்ளும் பழந் தமிழ் நூல்களைப் பயிலும் ஆற்றலை ஒரு சிலரே பெற்றுள்ளனர். தற்காலத் தமிழ் இதழ்களில் பல, பழந் தமிழர் நாகரிகத்தை விளம்பரப் படுத்துவதே இல்லை. ஒரு சில அதனை விளம்பரப் படுத்த முனையுங்கால், போலிகள் அவற்றைத் தலையெடுக்க வொட்டாமல் அழுத்த முயல்கின்றன. இவ் வளவு எதிர்ப்பினிடையே ஊக்கமும் உழைப்பும் குன்றாத சிலர் தமிழரை விழிக்கச் செய்து தம் உரிமை வழக்க வொழுக்கங்களைப் பின் பற்றும் படி செய்து வருகின்றனர். தமிழர் விழிப்புக்கொண்டு விட்டனர். தமிழ்க் கலை என்னும் இவ் விதழ் தமிழர் கண்களை நன்றாக மலர்த்தி, அவர் நெஞ்சினுள்ளும் புகுந்து, அவர் தம் உண்மை வழக்கவொழுக்கங் களைப் பேணுமாறு செய்யத் தோள் தட்டி நிற்கின்றது. இனித் தமிழர் யாவரும் உண்மைத் தமிழராவர் என்பதில் ஐயம் இல்லை.

இக் காலத்திற்கு ஒரு சில ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த தமிழர் களும் பண்டைத் தமிழர்கள் ஆவர். ஆயினும் அவர்களிடம் தனித் தமிழ் நாகரிகம் இருந்த தில்லை. இன்னும சில நூற்றாண்டுகளுக்கு முன் னிருந்த தமிழர்களிடமும் அப்படித்தான். ஆயின், கலப்பில்லாத தமிழர் வழக்க வொழுக்கங்களை அறிதற்கு உரிய கருவிகள் யாவை?

நல்ல வேளையாய், ஒழிந்தனபோக எஞ்சியனவாகச் சில பழந் தமிழ் நூல்கள் நம்மிடம் கிடைத்துள்ளன. பத்துப்பாட்டு எனவும், எட்டுத் தொகை எனவும், பதினெண் கீழ்க் கணக்கு எனவும் வகுக்கப்

பட்டு, ஒரு தொகுதியாகச் சங்க நூல்கள் என அவை விளங்குகின்றன. அவற்றிலும்கூடச் சிறிதளவு கலப்பு உள்ளது. எனினும் நூற்றுக்குத் தொண்ணூற்றைந்து பங்கு தனித் தமிழர் வழக்க வொழுக்கங்களை நாம் எடுத்துக்காட்ட அவை உதவியாக உள்ளன. எனவே தமிழராகப் பிறந்தவ ரெல்லோரும் அவற்றைப் பயிலும் பேறு பெற்றுவிடுவாரானால் பிறர் போலி யுரைகளைக் கேட்டு ஏமாற்றம் அடையார். அப் பேறு பெறுங் காலம் வந்துவிட்டது. தமிழன்னை முடி கவித்துச் செங்கோ லேந்தி அரியணையி லிருந்து முக மலர்ச்சியோடு ஆளுங் காலம் நெருங்கிவிட்டது.

சங்க காலத் தமிழ் நாடு பொன் கொழித்த நாடு. இன்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் இருந்த தமிழ் நாட்டில் நாம் சற்று நின்று பார்ப்போம். நம் கண் முன்னே காணும் காட்சிகள் என்ன ? பசி, பசி என வருந்தும் வறியவர்கள் காணப்பட வில்லை. புலவர், பாணர் முதலிய சில வகை மக்கள் தமக்கெனப் பொருள் குவித்துக்கொண்டு வாழாமல், ஊர்தோறும் சென்று ஆங்காங்குள்ள மக்களுக்கு உவகை யூட்டுதலும், அற வுரை வழங்குதலும் முதலிய செயல்கள் செய்வதைக் காண்கின்றோம். செல்வமுடையவர்கள் அவர்களைத் தொலைவில் கண்ட வுடனேயே அவர்களுக்குப் பணிவுகாட்டி, அவர்களை இன் முகத்தோடு வரவேற்று, யானையும், அணியும், உணவும் அவர்கட்கு வழங்குவதை நோக்குகின்றோம். ஏழைத் தொழிலாளிகளின் இரத்தத்தை உறிஞ்சும் முதலாளிகள் என்ற வகுப்பாரைத் தேடித் தேடிப் பார்த்தாலும் அவர்கள் அகப்பட வில்லை. பொருளுக்கும் புடைவைக்கும் ஏமாற்றமடைந்து, கண்ணிழந்து, காளையரை அணைந்து, கருக்கொண்டு, பின் செய்வ தறியாது, பச்சிளங் குழவிகளைக் கழுத்தைத் திருகிக் கால்வாய்களில் போடும் கலியாணமாகாத கன்னிப் பெண்களின் காட்சி யாண்டும் காணோம். பசியால் கண்ணீர் வடித்துக்கொண்டு பாதை யோரங்களில் பிச்சை யெடுப்பவரையும், அவர் காட்சி நெஞ்சைப் பிளப்பதாயினும் கல்நெஞ்சு உடையராய்க் கால்மீது கால் போட்டுக்கொண்டு ' காரில் ' விரைந்து செல்லும் பிரபுக்களையும் காண முடிய வில்லை. சாமியார்கள் என்ற வேஷம் போட்டுக் கொண்டு, தங்கள் கால்களில் விழுந்து வணங்கும் பெண்களின் கற்பினைப் பலாத்காரம் செய்து அழிக்கும் பாவிகளுள் ஒருவரையும் நாம் காணக் கூட வில்லை. ' என் தெய்வம் உயர்ந்தது ; உன் தெய்வம் தாழ்ந்தது ' என்று போரிட்டுக்கொள்ளும் மதவாதிகளையும் நாம் காண முடிய வில்லை. யாண்டும் சோலைகள் ; யாண்டும் வாவிகள் ; யாண்டும் பசுமை நிறைந்த காட்சி ; இவை நம் கண்ணினையும் நெஞ்சினையும் கவர்கின்றன. மக்களிடையே பொறாமை இல்லை. சடங்குகள் செய்வதற்குத் தாகர் முன் வரவில்லை. தற்காலம் சங்ககாலம் ஆகுமா ? ஏன் ஆகாது ?

சங்க காலக் காட்சி, சங்ககால வழக்க வொழுக்கங்களை அறிந்து கொள்ளுமாறு நம்மைத் தூண்டுகின்றது. அக் கால மக்கள் எவ்வாறு மணம் புரிந்துகொண்டனர் ? தாலிகட்டினரா ? இல்லையா ? தந்தை காதலிக்கப் பிள்ளை மணந்தானா ? பிள்ளை மணக்கத் தந்தை அனுபவித்

னாே ? தமிழ் மக்கள் குடுமிதான் வைத்திருந்தனரா ? மொட்டைதான் அடித்திருந்தனரா? பின், தம் தலையை எவ்வாறுதான் வைத்திருந்தனர்? உள்ளாடை தெரியுமாறு வெளியாடை அணிந்திருந்தனரா? ஆடை யணி யாமலேதான் இருந்தனரா ? இவைபோன்ற ஐயப்பாடுக ளெல்லாம் இக் காலத் தமிழன் மனத்தில் எழும். இவற்றையெல்லாம் இனி முறையே ஆராய்வோம் :

மங்கல மாகத் தொடங்குவது நல்லது. எனவே பண்டைத் தமிழர் திருமணச் சடங்குகள் யாவை என்பதை முதலில் காண்போம் :

## தமிழர் திருமணம் :

தற் காலத்தில் திருமணம் நடைபெற்றால் ஒரு புகைப் படம் எடுத் துக் கொள்வ துண்டு. மண மக்கள் மணக்கோலத்தோடு புகைப் படம் எடுத்துக்கொள்வது வழக்கம். வேண்டுமானல் மணப் பந்தரும் புகைப் படத்தில சேரும். அவ்வளவே. பண்டைத் தமிழர் திருமணம் ஒன்றில் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் எல்லாவற்றையும் நல்லாவூர் கிழார் என்ற பழம் புலவர் ஒருவர் ஓர் அழகிய ஓவியமாக நமக்குத் தந்திருக் கின்றார். அன்றைய நிகழ்ச்சிகளை அப்படியே நமக்குக் காட்டும் அவ் வோவியத்தின் அருமையை நாம் எவ்வாறு பாராட்டுவது? .

மண மகன் ஊர் யாது ? மண மகள் ஊர் யாது ? அவர்கள் பெயர் என்ன ? மண மகன் பெற்றோர் மண மகளைப் பேசி முடிப்பதற்கு எத் தனைமுறை சென்றனர் ? மண மகள் பெற்றோர் என்னென்ன நகை கேட் டனர் ? எவ்வளவு பணம் கேட்டனர் ? மணம், மண மகன் வீட்டிலா ? மணமகள் வீட்டிலா ? இவற்றை யெல்லாம் பிறகு பார்த்துக் கொள்ளு வோம். ஓவியத்தில் இவற்றையெல்லாம் காட்ட முடியுமா ? நல்லாவூர் கிழாருடைய ஓவியத்தை நோக்குவோம்.

மண மகனும் மண மகளும் இல் லறம் விரும்பி நிற்கின்றனர். மங்கல மாம் மனை மாட்சிமை விரும்பி நிற்கின்றனர். இல் லறத்திற்கு முக்கிய உறுப்பு விருந் தோம்பல். மண மகன், தான் உழைத்து ஈட்டிய பொருளை, விருந்தினர்க்கும், சுற்றத்தாருக்கும், திக்கற்றவர்க்கும், மற்ற வர்க்கும பகிர்ந்து கொடுத்துத் தானும் உட னிருந்து அனுபவித்தலையே விரும்பி நிற்கின்றான் ; அங்கேதான் அவன் இன்பம் அடைகின்றான் ; அதுதான் பே ரின்பம் எனக் கொள்கின்றான். சோறு வடித்து மலை போல் கொட்டிக்கிடக்கின்றது. காய் கறிவகைகள் கணக்கிட முடியாமல் சமைத்துப் பெருங்கலங்களில் வரிசையாக வைக்கப்பட்டுள்ளன. பலகார வகைகளும் அப்படியே. அவற்றுள் ஒன்று சிறப்பாகக் காட்சி யளிக்கின் றது. மணச் சடங்கு தொடங்குவதற்கு முன்னமே உணவு படைக்கப் படுகின்றது. கொழுமையும் களிப்பும் உண்டாக்கும் பாயசம் உண்கின்ற னர். உளுத்தம் பயற்றால் ஆனது அப் பாயசம். பாயசத்தை 'மிதவை'

என்கின்றனர். இவ்வுணவுதான் சிறப்பிக்கப்படுகின்றது. உளுந்து 'மிதப் பதனாலோ' அதனை உண்டார்க்குப் பெருமிதப்பு உண்டாவதனாலோ பாயசம் 'மிதவை' எனப்பட்டது! இவ்வாறு உணவு உண்ணும் செயல் நடந்தபடியாக இருக்கின்றது.

மனையின் நடுவிடத்திலும், முன்னும், பின்னும், பக்கங்களிலும் பெரிய பந்தர்கள் அமைத்திருக்கின்றனர். அவை தண்ணென இருக்கின்றன. பசுமையான ஓலைகளாலும், இலைகளாலும் அமைத்திருக்கின்றனர் பந்தர்களை. அவற்றின் கீழ் உட்காந்திருப்பவர்கள் உடலும் உள்ளமும் குளிர்ச்சியடைகின்றனர். தங்கள் வீடுகளையும், பந்தர்களின் குளிர்ச்சி அவர்களை மறக்கச் செய்கின்றது. ஆற்றிலிருந்து கொண்டு வந்து, பரப்பப்பட்ட புது மணல், கீழிடமெல்லாம், குளிர்ச்சியையும் தூய்மையையும், இனிமையையும் தருகின்றது. யாண்டும் பந்தர்கள் அமைந்ததனால் இருள் சூழ்ந்திருக்கின்றது. இருளை ஓட்ட, யாண்டும் விளக்குகள் அமைக்கப்படுகின்றன. சித்திரப்பாடுகள் அமைந்த பூமாலைகள் பந்தர்களில் தொங்குகின்றன. எங்கும் நறுமணம். எங்கும கண் கவரும் காட்சி! பந்தர்களுக்கு வெளியே சூரியன் வெளிச்சம் நன்கு நிலவுகின்றது.

பகற்பொழுதோடு மணம் முடிந்து விடுங்கொல்? மணம் காண வந்தவர்கள் ஒருபொழுதோடு வீடு திரும்புவர்கொல்? இல்லை ; இல்லை ; இரவும் இருப்பார். இரவில் பந்தர்களுக்கு வெளியே இருள் மூடிக்கொள்ளுமா? இல்லை. அப்படி இருள் மூடிக் கொள்ளும் நாளில் மணம் நடத்த ஏற்பாடு செய்வதேயில்லை. வளர் பிறை நாளில்தான் மணம் வைத்துக் கொள்ளுவார்கள். திங்கள் வெளிச்சம் மட்டும் போதுவதில்லை. திங்களொடு சேர்ந்து, நாள் எனப்படும் நட்சத்திரமும் ஒளி விடும் நாளே திருமணத்திற்கு உரிய நாள். இருபத்தேழு நட்சத்திரங்களுள் திங்களொடு நெருங்கி ஒளி மிகுதியும் தரும் உரோகிணி நட்சத்திரம் ஒளி விடும் நாளே மணத்திற்கு உரிய நாளாகத் தேர்ந்தெடுப்பார்கள். திங்கள்போல மண மகனும், உரோகிணிபோல மண மகளும் உலகத்தவர்க்கு விளக்கம் தந்து தம்முள் மணியும் ஒளியும்போல இணைந்து வாழவேண்டும் என்பதை அறிவுறுத்தவேண்டியே அந்த நாளை மண நாளாகத் தேர்ந்தெடுப்பது வழக்கம்.

மண நாளின் வைகறைப் பொழுதில் மணச்சடங்கு நடைபெறுவதற்குப் பலர் மங்கையர் உதவ வருகின்றனர். புதுக் குடங்களை அவர் தம் தலையில் சும்மாடு கோலி வைத்து எடுத்துச் செல்கின்றனர். மண்டைகள் எனப்படும் மூடிகள் குடங்களின் வாய்களை மூடிக்கொண்டிருக்கின்றன. பல நீர் நிலைகளிலிருந்து அம்மங்கையர் புதுக் குடங்களில் நீர் மொண்டு, அவற்றை மண்டைகளால் வாய் மூடி எடுத்துக்கொண்டு வருகின்றனர். கடுக் காய், நெல்லிக் காய், தான்றிக் காய், பூவகைகள், வெட்டிவேர் முதலியவைகள் குடங்களில் சேர்க்கப் படுகின்றன. புதுக் குடங்

யில் கொண்டுவந்த நீர், விரைவில் மிக்க குளிர்ச்சியை அடைகின்றது. அந்த நீர் கொண்டு மண மக்களை முழுக் காட்டுகின்றனர்; முன்னர்க் கொண்டு வந்த நீரை முன்னும், பின்னர்க் கொண்டு வந்த நீரைப் பின்னும் பெய்து முது செம் பெண்டிர் மண மக்களை நீ ராட்டுகின்றனர். நீ ராடிய பின் புதுப் பட்டாடை யணிந்துகொண்டு மண மக்கள் மனையின் நடுவில் விளங்கும் பந்தரில் மணக் கோலத்தோடு வந்து வீற்றிருக்கின்றனர். குளிர்ந்த, நறுமணம் வாய்ந்த, இனிய நீர் முழுக்காட்டினால் உடலும் உள்ளமும் குளிர்ந்து, நறுமணம் வீச, மண மக்கள் வீற்றிருக்கும் காட்சி கண்ணிற்கும் மனத்திற்கும் பெருவிருந்தாகின்றது.

புரோகிதர்கள் பலர் வருகின்றனர். நிமிஷத்திற்கு ஒருதரம் பல தானம் பலதானம் என்று வற்புறுத்திப் பொருள்பறிக்கும் தொழில்புரி பிறவி வாணிகப் புரோகிதர்களல்லர். பிள்ளை பெற்றறவர்கள்; தேம மெலன்னும் அழகிய கீற்றுக்கள் படர்ந்த அடி வயி றுடையவர்கள்; வெண்மையான நூ லிழை கழுத்தில் உடையவர்கள்; நான்கு பேர்கள் மங்கையர்கள்; அவர்கள் மந்திரம் சொல்லி, மணச் சடங்கு நடத்த முன் வந்து நிற்கின்றனர். மங்கையர்களே புரோகிதர்கள். அவர்கள் தீ யொன்றும் வளர்த்த வில்லை. பந்தரில் இருப்பவர்களின் கண்களைப் பிழியச் செய்யும் புகையை அவர்கள் எழுப்ப வில்லை. தங்கள் கைகளில் நெல் லும், பூவும், நீரும் ஏந்தி அவர்கள் நிற்கின்றார்கள். மண விழாக் காண வந்துள்ளவர்கள் கைகளி லெல்லாம் நெல்லும், பூவும், நீரும் உள் ளன. யாண்டும் அமைதி நிலவுகின்றது. மந்திரம் ஓதப்படுகின்றது: பொருள் தெரியாத பிற மொழியி லன்று; தமிழ் மொழியில் கூறப் படு கின்றது. வாழ்த்தே மந்திரம். மணமக்களுக்குதான் வாழ்த்து. அது தான் மந்திரம். மந்திரத்தை ஓதுபவர்கள் மேற்குறித்த நான்கு மங் கையர்களே. நால்வர்களும் ஒரே குரலில் வாழ்த்துகின்றார்கள். அம் மந்திரம் யாது?

“மணமகளே, நீ கற்பொழுக்கத்திலிருந்து வழுவா திருப்பாயாக! அறியவேண்டுவன வெல்லாம் அறிவதற் குரிய நல்ல மக்கள் பலரை உலகுய்தற்பொருட்டுப் பெறுவாயாக! கணவனைப் பெற்றவனை என்றும் காதலித்து ஒழுகுவாயாக! காதலனோடு பிரியாத வாழ்வினைப் பெறு வாயாக!”—இவ் வாழ்த்துத்தான் புரோகித மகளிர் கூறும் மந்திரம். இம்மந்திரத்தால் மணமகனையும் வாழ்த்தியிருப்பதைக் கூர்ந்து நோக்கி னால் அறியலாம்: கணவன் ஒழுக்கம் தவறி நடப்பானானால் கற்பொழுக் கக் காதலியிடம் நிலைபெற முடியாது. பிறர் தோயும் பிற மகளிர்பால் கூடியொழுகும் காதலன், பின் தன் காதலியைக் கூடுவானானால், பிறரைத் தன் காதலியிடம் தானே கூட்டினவனாவான். ஆண்டுக் கற்பொழுக்கம் காதலிபால் வழுவும். அங்ஙனம் தன் காதலியை விட்டுப் பிறரிடம் கூடு வதற்குக் காதலன் நினைப்பது, காதலியிடம் இல்லாத சிறப்பினைப் பிற ரிடம் காண்பதனாலே யாம். எனவே, தான் சிறந்த குண நலன்களெல்லாம் உடைய ளானால்தான், காதலிதன் கற்பொழுக்கத்தைத் தான் வழுவாமல்

போற்ற முடியும். அங்ஙனம் காதலன் தவறாதபடி, காதலி கற்பொழுக்கம் பெற்று நிற்கக் காதலன் தன் காதலியைப் பிரியாது வாழக் காதலி காதலனைப்பிரியாது வாழப் பெறற்கரிய பிள்ளைகளைப்பெற்று அவ்வாற்றால் இருவரும் மனைமாட்சியின் நன்கலத்தை எய்தி வாழவேண்டும் என்று அறிவுடைய மங்கையர்கள் வாழ்த்தும் வாழ்த்து மறைகளில் சிறந்து ஒப்பற்ற மந்திர மாதலை அறியுங்கால் நம்முடைய பழைய வழக்கத்தின் சிறப்புப் பொலிந்து தோன்றுகின்றது.

இங்ஙனம் வாழ்த்திக்கொண்டே அம் மங்கையர் மணமக்கள்மீது நெல்லையும், பூவையும், நீரையும் சொரிகின்றனர். உடனே பேராரவாரம் எழுகின்றது. மணப்பந்தரில் வந்து வீற்றிருப்பவர் யாவரும் அம் முறையே வாழ்த்திக்கொண்டு நெல்லையும், பூவையும், நீரையும் சொரிகின்றனர். மண மக்கள் கதுப்பில்-தலைமயிரில் - அவை பொலிந்து விளங்குகின்றன. மண மகன் மண மகள் கழுத்தில் மென்மையான வெள்ளிய நூல் இழையைக் கழுத்தொடு கழுத்தாயப் பொருந்துமாறு கட்டுகின்றான். மணமுடிவு பெறுகின்றது. ஓரளவுதான் மணம் முடிவு பெறுகின்றது. இதற்கு வதுவை நன் மனம் என்று பெயர். விருந்து நடைபெற்ற வண்ணம் இருக்கின்றது.

பொழுதுபோகின்றது. சுற்றத்தவர்கள் வருகின்றனர். "மணமகளே, நீ பெருமை பொருந்திய இல்லக் கிழத்தி யாவாயாக!" என வாழ்த்திப் பஞ்சணை யமைந்த ஓர் அறையில் அவளைக் கொண்டு சேர்த்து நீங்குகின்றனர். உணர்ச்சி கிளர்ந்தெழ, நாண்மிகுதியால் முகத்தை முன்தானையால் மூடிக்கொண்டு, உடல் வளைந்து, பஞ்சணையில் காதலி கிடக்கின்றாள். காதலன் அறைக்குள் நுழைகின்றான். முக மூடியை அகற்றுகின்றான். காதலி அச்சத்தால் பெருமூச்சு விடுகின்றாள். முன்னரே அறி முக மானவளாயினும் கற்புடையளாதலால் நாணம் என்றும் நிலவும். காதலன் அவள் உறுப்புக்களை வருடி, அச்சமும் நாணமும் நீக்கி, உவகையூட்டிக் கூட்டம் புரிகின்றான். இதனோடு மணம் முற்றுப் பெறுகின்றது. இதுதான் பண்டைத்தமிழர் திருமணம். இத்திருமணம் எவ்வளவு அழகாகவும் நன்றாகவும் இருக்கிறது! இஃது எப்படி மறைந்தது?

---


# தமிழணங்கு

(செந்தமிழ் மாதப் பத்திரிகை)

ஆசிரியர் : அ. ம. சிவஞானம்

**தனிப் பிரதி 0—6—0 ஆண்டுச் சந்தா 3—4—0**

ஆசிரியர் - "தமிழணங்கு" தமிழரண்,
ஆம்பூர், N. A. Dt.

தொடர் கதை

# விடுதலையா?

(மு. வரதராசனார்)

காலை எட்டு மணிக்கு முன்னமே தலைமை யாசிரியர் வந்து பள்ளிக்கூட வாயிலில் நின்றுகொண்டிருந்தார். வேலையாட்கள் அவருக்கு முன்னே வந்து காகிதத் துண்டெல்லாம் பொறுக்கி தூசெல்லாம் துடைத்துக்கொண்டிருந்தார்கள். சிவப்புக் காகிதமும் நீலக்காகிதமும் கத்தரித்துச் செய்த காகித தோரணங்களைத் தலைமை யாசிரியர் வேலையாட்களின் உதவி கொண்டு கட்ட முயன்றார். அதற்குள் பள்ளிக்கூடச் சிறுவர்களில் பெரியவர்கள் - வளர்ந்த பிள்ளைகள் சிலர் முன்வந்து வேலையாட்களின் கையிலிருந்து அந்தத் தோரணங்களை வாங்கிக்கொண்டார்கள். தங்கள் கை உழைப்பால் கத்தரித்து ஒட்டிச் செய்த விலைமதிப்பற்ற அந்தத் தோரணங்களைத் தங்கள் கையாலேயே கட்ட வேண்டும் என்பது அந்தப் பெருஞ் சிறுவர்களின் ஆவல். "பள்ளிக்கூட வேலையில் இவ்வளவு அக்கறை! படிப்பில் இவ்வளவு அக்கறை இல்லையே!" என்று தலைமையாசிரியர் முணுமுணுத்தார். சிறுவர்கள் இதைக் கேட்டதும் திரும்பித் திரும்பி அவருடைய முகத்தைக் கண்டு புன்முறுவலை உணர்ந்து ஊக்கமே கொண்டார்கள். "இன்றைக்குக் கூடவா படிப்பு!" என்று ஒருவன் அவருடைய செவியில் விழுமாறு சொல்லிவிட்டுத் தலைகுனிந்தான்.

தலைமையாசிரியர் அன்று அழகாக உடுத்திருந்தார். சலவைசெய்த சருட்டுக் கோட்டு அவருக்கு நல்ல தோற்றத்தைக் கொடுத்தது. தூய்மையான வெள்ளாடையைக் கீழ்ப்பாய்ச்சாகக் கட்டியிருந்தார். அவருடைய தலைப்பாகையும் புதிதாக இருந்தது. அதன் ஓரங்களில் அழுக்குக்கறை அமையவில்லை. இன்னும் இரண்டு வாரகாலம் அவருடைய தலைமீதிருந்து வியர்வை ஊறினால்தான் அந்த அழுக்கு ஓரங்களில் கறைபோல் அமையும்.

அவருடைய கையில் இருந்த பிரம்பில் மட்டும் புதுமைத் தோற்றம் இல்லை. அது ஒடிந்து மொக்கையாய் நின்ற பழைய பிரம்பே. அதற்கு ஒன்றும் வேலை இல்லாமையால், கோட்டுக்கும் தலைப் பாகைக்கும் வந்த வாழ்வு அதற்கு வரவில்லை. மற்ற நாட்களில் பள்ளிக்கூட ஒழுங்கு முறைக்குக் காரணமாக இருந்த அந்தப் பிரம்பு இன்று ஒருநாள் மட்டும் கோட்டுக்கும் தலைப்பாகைக்கும் செல்வாக்கைக் கொடுத்துவிட்டுத் தான் இருக்குமிடம் தெரியாமல் இருந்தது. அந்த ஊர் நகராண்மைக் கழகத்தின் பழைய தலைவர் தேர்தலில் தோற்று

விட்ட மறுநாள் மானங்காத்து மறைந்து வாழ்ந்ததுபோல் அன்றுகாலையில் அந்தப் பிரம்பு அவர் கையில் இருந்தது. அவர் அந்த பிரம்பை ஆட்டவுமில்லை; ஓச்சவுமில்லை. வாளா வைத்திருந்தார். அது அசைவின்றிக் கிடந்தது. ஆனால் அந்தப் பள்ளிக்கூடத்தில் பிரம்பின் பதவிக்குத் தேர்தல் ஒன்றும் நடந்ததாகவோ, நடந்தாலும் பிரம்புக்குப் போட்டி ஒன்று இருந்ததாகவோ தெரியவில்லை. எப்படியோ, பிரம்பு செல்வாக்கு இழந்திருந்தது.

பிரம்பின் செல்வாக்கற்ற நிலைக்காகச் சிறுவர்கள் ஒருவரும் வருந்தியதாகத் தெரியவில்லை. ஐந்துவயது முதல் பன்னிரண்டு வயது வரையில் உள்ள சிறுவர்களே அந்தப் பள்ளிக்கூடத்தில் படிப்பவர்கள். அது துவக்கப் பள்ளிகூடமாதலால், காலை எட்டரை மணிமுதல் பதினொன்றரை மணி வரையில் நடக்கும். சிறுவர்களோ எட்டு மணி முதல் ஒன்பது மணி வரையில் வந்துகொண்டிருந்தார்கள். ஆனால் அன்று காலை மட்டும் எட்டேகால் மணிக்கெல்லாம் சிறுவர்கள் பெரும்பாலோர் வந்து திரண்டுவிட்டார்கள். பள்ளிக்கூடம் திறந்திருந்தும் அதனுள்ளே புகாமல் வெளியே விளையாடுமிடத்தில் நின்று ஆடியும் ஓடியும் துள்ளிக்கொண்டிருந்தார்கள் அந்த இளங்கன்றுகள். தலைமையாசிரியர் அத்தனைக்கும் இடங்கொடுத்தார். அவர் அவ்வாறு பொறுமையாக விட்டுவிட்டதைக் கண்ட மற்ற ஆசிரியர்களும் இடங்கொடுத்தார்கள். அவர்களுடைய மகிழ்ச்சிப் பெருக்கு மலர் முகத்தில் நகையொளியாய் வீசிற்று. மாசற்ற இளங்குழந்த வாய்கள்—பொய்யறியாத் திருவாய்கள் குறுநகை அரும்பிப் பெருநகையாய் மலர்ந்தன. அந்தத் திருவாய்மலர்களில் வெண்முத்துக்களாய்த் தூய பற்கள் ஒளிவீசின. இந்த அழகொளியே அந்தக் காலைப்பொழுதில் முத்துக்காரத் தெருவைச் சிறப்பித்தது.

"டேய், இன்றைக்கு இன்ஸ்பெக்டர் தானே வருகிறார்?" என்று கேட்டான் ஒருவன்.

"போடா, போ, இன்ஸ்பெக்டர் வந்தால் காகித தோரணம் கட்டுவார்களா?" என்றான் மற்றொருவன்.

"நேற்று ஆசிரியர் சொன்னாரே கேட்கவில்லையா?" என்றான் ஒரு சிறுவன்.

"இன்றைச்குச் சுகாதாரக் கொண்டாட்டம் எனக்குத் தெரியும்" என்றான் மூன்றாம் வகுப்புச் சிறுவன் ஒருவன்.

"சுகாதாரம் என்றால் என்ன? யானையா? அது எங்கே இருக்கிறது?" என்று கேட்டான் முதல் வகுப்பில் படிக்கும் சிறுவன் ஒருவன்.

அவன் கேட்ட கேள்வியைப் பற்றிப் பக்கத்தே இருந்த சிறுவர்கள் சொல்லிச் சொல்லிச் சிரிக்க, அது அப்படியே எல்லாச் சிறுவர்களுக்கும் எட்டித் தலைமையாசிரியர்க்கும் எட்டியது. அவரும் தம்மை

மறந்து சிரித்தார். அந்தச் சிறுவனை அழைத்து வரும்படி ஏவினார். சிறுவன் நடுநடுங்கிக்கொண்டே வந்து நின்றான்.

" உன் பெயர் என்ன ?" என்றார் தலைமையாசிரியர்.

" திருவேங்கடம் " என்று அஞ்சி நின்றான் சிறுவன். அவனை அந்நிலையிலேயே விட்டால் கண்ணீர் கலங்கி அழுது விடுவான் போலத் தோன்றியது. அதை உணர்ந்த தலைமையாசிரியர் புன் சிரிப்போடு முதுகில் தட்டிக்கொடுத்து, " நீ இது வரையிலும் யானையே பார்த்த தில்லையா ? உனக்குக் காட்டுவேன். யானை, பூனை எல்லாம் பார்க்கலாம்" என்று தேறுதல் சொல்லி யனுப்பிவிட்டார்.

அருகே இருந்த மற்றொரு சிறுவனைப் பார்த்துத் தலைமையாசிரியர் அவனுடைய அழுக்கடைந்த ஆடையைக் காட்டி, " இப்படி யாராவது வந்தால் இங்கே சேர்க்கமாட்டேன். இரண்டு மணிக்குப் பள்ளிக்கூடம் வரும்போது எல்லாரும் புதுச் சொக்காய் போட்டுக் கொண்டு தலைக் குக் குல்லாய்ப் போட்டுக் கொண்டு ஒழுங்காக வரவேண்டும். தவறிக் கந்தலும் அழுக்குமாக வந்தால் வெளியே நிறுத்திவிடுவேன். கொண் டாடாட்டத்திற்குச் சேர்த்துக்கொள்ள மாட்டேன். தெரியுமா?" என்று ஒரு கனைப்புக் கனைத்தார்.

" சார், இவனும் அழுக்குத்துணி போட்டுக்கொண்டு வந்திருக் கிறான் " என்று ஒருவனை இரண்டு மூன்று சிறுவர்கள் தள்ளிக்கொண்டு போய்த் தலைமையாசிரியரிடம் நிறுத்தினார்கள்.

" நீ என்ன சின்ன பையனா ? இப்போதுதான் பள்ளிக்கூடத்தில் வந்து சேர்ந்தாயா ? நீ இப்படி வரலாமா ? மூன்றாவது படிக்கிறாய், அறிவு இல்லை " என்றார் தலைமையாசிரியர்.

" நேற்று நீங்கள் சொன்னபோது நான் இல்லை. எனக்குத் தெரியாது " என்றான் அவன்.

" நேற்று ஏன் பள்ளிக்கூடத்திற்கு வரவில்லை ?"

" வந்திருந்தேன். மூன்று மணிக்குத் தண்ணீர் குடிக்கக் கேட்டுக் கொண்டு வீட்டிற்குப் போய்விட்டேன். அதனால்தான் —"

" அப்புறம் தெருவில் மற்றப் பிள்ளைகளைக் கேட்டுத் தெரிந்து கொள்ளக்கூடாதா? நீ சோம்பேறி. "

" மற்றப் பையன் யாரும் என்னோடு பேசுவது இல்லை."

" நீ சண்டைக்காரன் என்று தெரிகிறது " என்று தலைமை யாசிரியர் கடுகடுத்தார்.

" வீட்டுக்குப் போய்ப் புதுச்சொக்காய் போட்டுக்கொண்டு வந்திடுவேன் " என்று அவன் போக விடை கேட்டான்.

" அவன் போனால் இப்போது வரமாட்டான். அடிக்கடி தண்ணீர் வேண்டும் என்று கேட்டுக்கொண்டு வெளியே போய் எங்கேயாவது திரிந்துகொண்டிருப்பான். இர்ரெகுலர் பாய் (Irregular Boy)" என்று மற்றோர் ஆசிரியர் எடுத்துரைத்தார்.

"ஒழியட்டும், எப்படியாவது போகட்டும். இன்றைக்கு ஒரு நாளாவது ஒழுங்காக வரக்கூடாதா" என்று தலைமையாசிரியர் சொல்லி விட்டு மணியடிக்கச் செய்தார். மணியடித்தது. சிறுவர்கள் வகுப்பு நோக்கி ஓடத்தொடங்கினார்கள். அவர்களை ஓடாதவாறு நிறுத்தி, "மறுபடியும் சொல்கிறேன். இரண்டு மணிக்குப் பள்ளிக்கூடம் வரும்போது, எல்லோரும் அரை அரையணா எடுத்துக் கொண்டு வர வேண்டும். அரையணா இல்லாதவர்களுக்குக் கொடி கிடைக்காது. அந்தக் கொடி வாங்கிச் சொக்காயில் குத்திக்கொண்டால்தான் கொண்டாட்டத்தில் சேரலாம். ஒரு கொடி அரையணா" என்று சொல்லித் தம்முடைய கோட்டில் குத்திக்கொண்டிருந்த கொடியைக் காட்டினார். சிறுவர்கள் வகுப்புக்களில் போய் நின்றார்கள். கடவுள் வாழ்த்துப்பாட்டு முழங்கப்பட்டது; கடலொலிபோல் குழப்பமாய்க் கேட்டது.

"நம்முடைய தேசத்திற்கு என்ன பெயர்; இந்தியா என்று நேற்றுச் சொன்னேன் அல்லவா?" எனத் தலைமையாசிரியர் குரல் கேட்டது. "ஒரு வியாபாரி 800 தேங்காய் வாங்கி—" என்று மற்றோர் ஆசிரியர் கணக்குக் கொடுக்கலானார். "நன்றி ஒருவர்க்குச் செய்தக்கால் அந்நன்றி" என்று ஒரு வகுப்பில் சிறுவன் ஒருவன் பாட்டு ஒப்புவிக்கத் தொடங்கினான். "கண்ணன் தின்னும் பண்டம் வெண்ணெய்" என்ற ஒலி மற்றொரு வகுப்பில் கேட்டது. வெளியே "நேரமாய்விட்டது. நல்ல அடிவிழும்" என்று சொல்லிக் கொண்டே சிறுவர் இருவர் பள்ளிக்கூடத்தை நோக்கி ஓடிவந்தார்கள்.

மாலை மூன்றரை மணிக்குப் பள்ளிக்கூடத்தை அடுத்த வெட்ட வெளி பெரும் பொலிவு பெற்றிருந்தது. ஐந்து வகுப்புகளும் ஐந்து அணியாக நிற்க, ஐந்து ஆசிரியர்கள் அவற்றின் முன் நின்றுகொண்டிருந்தார்கள். மாலை வேளையில் கூரை முகப்பில் அணிவகுத்து அமர்ந்து கா என்ற நெட்டெழுத்தையே பல நூற்றாண்டுகளாகக் கற்று வரும் காக்கை பள்ளிக்கூடமும் இன்று அழகில் தோற்றுவிட்டது எனலாம். சிறுவர்கள் ஐந்து ஐந்து பேராகப் பிரிக்கப்பட்டுப் பெரிய பையன் ஒருவனிடம் ஒப்புவிக்கப்பட்டார்கள். அந்தப் பெரிய பையன் கையாம். அவனிடம் ஒப்படைக்கப்பட்ட ஐவரும் ஐந்து விரல்களாம். அவனுக்கு அந்த ஐவர் பெயரும் தெரிய வேண்டுமாம்,

| | |
|---|---|
| சுண்டு விரல்— | திருமால் |
| மோதிர விரல்— | கோபாலன் |
| நடு விரல் | பார்த்தசாரதி |

சுட்டு விரல் வேலப்பன்
கட்டை விரல் அப்துல் ரசாக்

என்று இப்படி ஒருவன் தன் கைவிரல் விட்டுவிட்டு மனப்பாடம் செய்து கொண்டிருந்தான். எல்லோருடைய தலையிலும் குல்லாய்கள் பல நிற மாய் அழகு செய்தன. சரிகைக் குல்லாய்கள் சில, பட்டுக்குல்லாய்கள் சில, அட்டைக் குல்லாய்கள் சில, துருக்கிக் குல்லாய்கள் சில. குரங்குக் குல்லால்கள் சில. வெள்ளை சில, நீலம் சில, கருப்புப் பல, சிவப்புப்பல. கோட்டும் கால்சட்டையும் அணிந்தவர்கள் சிலர்; சொக்காயும் துண் டும் அணிந்தவர்கள் பலர். பட்டாடையும் பளபளப்புமாய் விளங்கியவர் கள் சிலர்; பருத்தியாடையும் பாங்குமாய் விளங்கியவர்கள் பலர். காகிதக் கொடிகள் குண்டூசிகளால் குத்தப் பெற்றுச் சிறுவர்களின் சொக்காயி லும் கோட்டிலும் விளங்கின.

ஒரே நிறமான உடை மட்டும் அவர்களுக்குத் தந்து உடுக்கச் செய்திருந்தால் ஏதோ ஒரு புதிய படையெடுப்பு என்று சொல்லத்தக்க பெருமை பெற்றிருக்கும் அந்தச் சிறுவர் அணிவகுத்த அழகு. அவர் களிடம் காணப்பட்ட பெரிய மாறுதல் ஒன்று; அதாவது அவர்கள் கையில் பலகையும் புத்தகமும் இல்லை; சிலர் கை வெறுங்கையாக இருந் தன; சிலர் கை கைகுட்டையுடன் அசைந்தன. சிலர் கைகள் குண்டூ சியையும் கொடியையும் தடவிக்கொண்டிருந்தன. சிலர் கைகள் குல்லா யின் சரிகைக்கரையையோ மெத்தென்ற மேற்புறத்தையோ தடவிக் கொண்டிருந்தன. சிலர் கைகள் பொத்தான் பொருத்தத் தெரியாமல் அலைந்து கொண்டிருந்தன. சிலர் கைகள் ஆடையின் சரிகைக்கரையை நேரே நீட்டி ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்தன. சிலருடைய கைகளோ முன்னே இருந்த சிறுவர்களின் குல்லாயில் காகிதத் துண்டுகளை அவர் கள் அறியாமல் செருகிக்கொண்டிருந்தன.

"நான் சொல்லுகிற வரைக்கும் இங்கே அங்கே நகரக்கூடாது; நகர்ந்தால் நாளைக்குப் பள்ளிக்கூடம் வந்ததும் பழுக்கப் பார்த்துக்கொள் வேன். இன்றைக்குப் பெப்பர்மிட் பொட்டலமும் கிடைக்காது. நகர்ந் தால் வெளியே போகவும் முடியாது; போலீசார் சுற்றிலும் காவல் இருப்பார்கள். தெரியுமா? தண்ணீர் வேண்டுமானால் இப்போதே கேட் கலாம்; அப்புறம் கிடைக்காது. ஒன்றுக்கும் இப்போதே கேட்டுக் கொண்டு போய்வரலாம். கலெக்டர் ஆபீசின் எதிரே போய்ச் சேர்ந்த தும் ஒருத்தனும் வாலாட்டக் கூடாது. நல்ல பிள்ளைகள் என்று பெய ரெடுக்கவேண்டும். தெரியுமா?" என்று தலைமையாசிரியர் நீண்ட உப தேசம் செய்தார். (தொடரும்)

# கலையின் நிலை

(திரு. கா. அன்பழகன், M. A.)

கலையென்று சொல்லிய அளவாலேயே, அது நிலைபாலே உயர்ந்ததென்றும், எளிய மக்களுக்கு விளங்காததென்றும் எண்ணுவோர்பலர். அதைப்போலவே வாழ்க்கை யென்று சொல்லிய உடனேயே, அது துன்பக் கொள்கலம் என்றும், பிறந்தோர் உறுவது பெரும் பெருந் துன்பம் என்றும் தீப்பிணி இருக்கை யென்றும், கருதுவோரும், கருதா விடினும் பேசுவோரும் பலர். இந்நிலையில், கலையைப்பற்றி நாம் உணர வேண்டுவதோடு, வாழ்க்கையை நேருக்கு நேர் பார்க்கவேண்டியவர்களாகவும் கலைக்கும் வாழ்வுக்கும் உள்ள தொடர்ச்சியையும் அதன் விளைவையும், ஆழ்ந்து நோக்கி சிந்திக்கவேண்டியவர்களாகவும் இருக்கிறோம்.

கலை என்றால் என்ன? கலையென்றால், கண்ணிக்கினியது, செவிக்கினியது, புலனுணர்வுக்கும் பொறி நுகர்ச்சிக்கும் இன்பம் பயப்பது, மனத்துக்கும் கருத்துக்கும் கவர்ச்சியளிப்பது என்றே எவரும் கூறுவர். கலை இனிமையுடையதுதான், இன்ப உணர்வை எழுப்புவதெல்லாம் ஏறத்தாழ கலையென்றே சொல்லப்படுகின்றன. ஆனால் கலையிடம் இனிமைமட்டுமே காணப்படவில்லை. அதன் விளைவும் நிகழ்ந்துகொண்டேயிருக்கிறது. அந்த விளைவு நன்மையாகவும் இருக்கலாம் தீமையாகவும் இருக்கலாம். அறிவை வளர்க்கவும் செய்யலாம், அழிக்கவும் செய்யலாம். ஈரத் தனத்தையும் விளைக்கலாம், கோழைத் தனத்தை வளர்க்கலாம். சர்க்கரை, நாவிற்கு நல்ல சுவைதான். ஆனால் உடலுக்கு நல்லதல்ல என்பது மட்டுமல்ல, சில சமயங்களில் பெருந் தீமையையும் விளைவிப்பதைக் காணலாம். அதைப் போலத்தான் கலையும் சுவையுடையதுதான். ஆனால் விளைவோ, அதன் நிலைக்கும் வகைக்கும் ஏற்றாற் போல் நல்லதாகவும் இருக்கலாம், தீயதாகவும் அமையலாம்.

கலையைப் பல பிரிவாக்கித் தெளிவாகச் சொல்லவேண்டுமானால், ஓவியம் ஒருகலை, காவியம் ஒருகலை, சிற்பமும், சித்திரமும் கலைகள், இசையும் காட்சியும் கலைகள், என்று கூறலாம். இந்தக் காவியத்தையும் ஓவியத்தையும், சிற்பத்தையும், சித்திரத்தையும் நோக்கவேண்டுமானால், கலைக்கண்கொண்டு நோக்கவேண்டுமென்றும், அவ்வாறு நோக்குவார்க்கே அதன் சிறப்பும் மதிப்பும் புலப்படும் என்றுச் கலைஞர்கள் கூறுவார்கள். அதனிடத்திலே, கருத்து வளர வளர, அதன் தன்மையை உள்ளம் உணர உணர, கண்ணும் கருத்தும் ஓவியத்தையும் காவியத்

தையும், கண்டும் பழகியும் பருகப்பருக கலையின் உயிர்ப்பண்பினை மேலும் மேலும் உணரலாம். ஆனாலும், அந்தப் பழக்கமும், தேர்ச்சியும் பெறாவிட்டால், கலையை உணரவே முடியாது என்று யாரும் உரைக்க முடியாது. கோபுரத்து பொம்மையையோ, பொம்மைக்கால் ஆட்டத்தையோ, பார்த்து மகிழும் எளிய கிராம மக்களும் அதை ஓரளவு விரும்பித்தான் பார்க்கிறார்கள். கலையோ பழங்கலை. பார்க்கிறவர்களோ கலையுணர்வு அற்றவர்கள், கலைஞர் கருத்துப்படி. அங்கும் ஒருவித கலைக்கவர்ச்சி இருக்கத்தான் செய்கிறது. நல்ல முறையிலே இல்லாவிடினும், குறைந்த அளவிலே ஒரு கலையுணர்ச்சியை அங்கே காண்கிறோம். ஆகவே, மனிதன் எவனாயினும், கலையுணர்வுலகிலே நுழையாவிடினும், கலை என்ற பெயரையே கேட்காவிடினும், கலையிலே ஓரளவு கவர்ச்சியுறுகிறான். இதுதான் இயற்கையுமாகும்.

கலையென்றால், அதன் கண்ணேயே மூழ்கிவிடுதல் வேண்டும் என்பார்கள் சிலர். மூழ்குவதுப்பற்றித் தடையில்லை. மூச்சுப் பொறுக்கின்ற அளவிற்குத்தான் தண்ணீரில் மூழ்கியிருக்க முடிவதுபோல, மனிதன் தன்னையும், தன்னைச் சூழ்ந்திருப்பதையும் மறந்திருக்கக்கூடிய வரையில்தான் கலையில் மூழ்கியிருக்க முடியும். பிற எண்ணந் தோன்றுங்காலை கலையிலே மூழ்கியவன் வெளியில் எழுகிறான். வெளியுலகைக் காண்கிறான், தன்னுணர்வடைகிறான், கலையைக் கண்டு மகிழ்கிறான், கலையினால் பயனடைகிறான்.

கலையிலேயே பிறவற்றை மறந்து மூழ்கிவிட்டால்தான் என்ன? என்று கேட்பாரும் உளர். அகிற்கட்டையால் அடுக்கப்பட்ட சிதையிலே இடம் பெற்றுவிட்டாலும், தாமரைத்தடாகத்திலே மூழ்கித் திரும்பி வரா விட்டாலும், அதனால் உலகத்திற்கு ஏற்படும் விளைவு தான், இதனாலும் என்று கூற விரும்புகின்றேன். அப்படிக் கலையில் மூழ்கியவரால், உலகத்திற்கும் (வாழ்க்கைக்கும்) பயனில்லை, தனக்கும் பயனில்லை என்பதை உணர வேண்டும். கலையின் நோக்கமும் நிறைவேறாது போய்விடும்.

"நாயைக் கண்டால் கல்லைக்காணோம், கல்லைக் கண்டால் நாயைக் காணோம்" என்ற பழமொழியைக் கேட்டிருப்பீர்கள். நம் நாட்டுச் சிறுவர்களுக்கு, நாயைக்கண்டபின் கல்லைத் தேடிக் காணாத சமயத்திலெல்லாம் இந்தப் பழமொழி நினைவிற்கு வருவதுண்டு. அவர்களுக்குத் தோன்றுவது அந்தக் கருத்து. இதற்கு ஓர் தத்துவப் பொருளும் உரைப்பார்கள். கோவிலிலே சென்று காணுகின்ற கற்கடவுளை, கடவுளென்று நினைக்குங்காலை கல் மறைந்துவிடுகிறது, கல்லென்று எண்ணுங்காலை கடவுள் மறைந்து விடுகிறது. ஆகவே, கல்லென்று எண்ணிப் பாராதே, கடவுளென்றே கருது என்பார்கள்.

கல்லிலே நாயின் உருவத்தைக் காணுகின்றோம். பொம்மை நாய் என்றோ, கல் நா[illegible] எனினும், சிற்பவாயை மட்டும், சிலை என்[illegible] மில்லா[illegible] பார்க்கநேரும்போது,

அது நாயாகவே, உயிருள்ள நாயைப்போன்றே தோன்றுகிறது. 'அந்த எண்ணம்' தோன்றிய உடனேயே மறையவும் நேரிடுகிறது. உயிர் நாய் என்று எண்ணிய மறுகணமே இது கல் நாயல்லவா என்ற எண்ணம் பிறக்கத்தான் செய்கிறது. கல்லல்லவா நாய் உருவத்தில் இருப்பது என்ற எண்ணம் தோன்றாமல் இருக்கமுடியாது. அவ்வாறு தோன்று வது தவறுமல்ல. ஆனால், அதை "நாயாகவேதான் காணவேண்டும்; நாயாகக் காண்பவரே கலையுணர்வுடையார்" என்பவர்கள் நாளடைவில் தோல்வியைத்தான் கண்டார்கள். கண்டும் வருகிறார்கள் என்பது கண் கூடு. நாயென்றே எண்ணிவிட, நம்பிவிட நாம் குழந்தைகளுமல்ல, குழந்தைகளுங்கூட சில விநாடிகளுக்குப் பின்னால் நம்பவும் மறுப்பார் கள் நாயைக் கண்டிருந்தால்! கல்லை நாயென்றே எண்ணுவதாக வைத் துக்கொண்டாலுங்கூட, அவ்வாறு எண்ணுகின்ற கலைஞர்கள் கூட, தங் கள் வீட்டுக்காவலுக்கு அதைக் கட்டவிழ்த்துவிடக் கருதுவதுமில்லை. இப்படிக் கருதும் கலைஞர்கள் உண்மையை உணருகின்ற உள்ளக் கிடக்கைக்குப் பதிலாகக், கற்பனையையே உண்மையென்று நம்பவும் கருதவும் பயிற்சி பெற்று வருகிறார்கள்.

நாய் கல்லால் செய்தது என்பது உண்மை. அதன் புறத்தோற்ற அளவிலே தான் அது நாய்; அதிலுங்கூட, ஆடாத, அசையாத, வாலாட் டாத, குலைக்காத—புறத் தோற்றத்தையுடைய நாய். அதன் தோற்றமே உடல் முழுவதுமே கல், கல்லிலே வேலைப்பாடு, வர்ணம். கல்லில் தோன் றும் சிலை நாயை—அழகிய சிறந்த வேலைப்பாடுள்ள உயிர் நாயை ஒத் துள்ள நாய் என்று கருதுவதே கருதக் காரணமாவதே, கலை என்பதை, நினைவூட்டுகிறேன். ஆனால் நாயென்பதற்காக, கல்லல்ல என்று கூறுவது உள்ளதை மறைப்பது, உண்மையை மாற்றுவது. கல்லென்பது மறைக்கப்பட்டால்—கல், கல்லில் செய்யப்பட்ட வேலை, அவ்வேலையால்

---


# தமிழ்க் கலை

(திங்கள் வெளியீடு)

தனி இதழ் 0—4—0 ஆண்டுச் சந்தா 3—0—0

**விளம்பர விகிதம்**

| | | |
|---|---|---|
| அட்டை மேல்புறம் | ஒரு தடவைக்கு | ரூ. 100/- |
| ,, உட்புறம் | | 75/- |
| சாதாரண பக்கம் | | 50/- |
| ,, அரைப் பக்கம் | | 30/- |

வாழும் மனிதன் ஆகியவர்கள் மறைக்கப்படுகிறார்கள். வாழ்வின் உண்மை மறைந்து விடுகிறது. எண்சாண் உடம்பில் ஒரு சாண் வளர்க்கவோ, அன்றி மனத்தைத் திருப்திப்படுத்தவோ இப்படி "ஒருவன் கல்லைக் கலையாக்கினான், அதுவே அவன் வாழ்க்கை" என்ற உண்மை, மறைய நேரிடுமானால், அது உலகியலை மறைப்பதாகும். சிலை நாயை உயிர் நாயாக்குவது இயலாதது போலத்தான், கலைக் கற்பனையை வாழ்க்கை உண்மையாக ஆக்குவதும் இயலாது என்றும், கலையை உணர்வதற்காக, வாழ்க்கையை மறந்து விடுவது இயலாது என்றும், வாழ்க்கையை உணர்த்தாத எந்தக் கலையும் உண்மைக் கலை, போற்றத் தக்க கலையாகாது என்றும் கூற விரும்புகிறேன். கலை நோக்கம் உலகியலை உணரத் தடையாகுமானால், அதுவே வாழ்க்கைக் கொலையாகும். அக்கலை நமக்குத் தேவையுமில்லை. கொலைக்குப் பெயர் கலையுமல்ல.

ஒரு பெரிய காடு. ஒரு புறத்திலே வேடனொருவன் ஒரு கலையைத் துரத்துகின்றான். கலையென்றால்—மானையும் குறித்திடும் என்பதை அறிவீர்கள். மானிறைச்சியே அவ்வேடனுக்கு உணவு. அன்று காலை அவன் கண்ணிலே சிக்கியது அந்தக் கலை. கலையை நோக்கி யெய்த கணை குறிதவறியது. இந்நிலையிலே, வேடனுக்குப் பக்கத்திலே ஒரு முனிவர் வேடனைப் பார்த்தார். அவருக்கு கலையைக் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணம். கொல்லாதே! புல்வாய்! வேண்டாம் என்றார். இவை வேடன் காதிலே ஏறவில்லை. ஆனால் வேடன் விடுத்த அடுத்த கணை குறிதவறவில்லை. கணை பாய்ந்த கலை, கால் சுருண்டு விழுந்துவிட்டது. கலை அழகுடையது—உயிர்க்கலை; கொல்வது கூடாது என்பது முனிவரின் எண்ணம். அதை அவர் கூறினார். ஆனால் வேடன் பதிலளிக்கவில்லை. திரும்பிப் பார்த்தான். அந்தப் பார்வையிலேயே பதில் இருந்தது. இதுவன்றி என்வயிற்றுக்கு வேறென்ன வழி? என்பதே அவனுடைய பதில். முனிவர்கள் கந்தமூலங்களை உண்டு காலத்தைக் கடத்தலாம். ஆனால் காலத்தோடு போராடும் ஓர் சமுதாயத்தைக் - கூட்டத்தைச் சேர்ந்தவன் கந்தமூலங்களை உண்டு காலங்கடத்த முடியுமா? அவன் அளித்த பதிலுக்கு யாரே மறுத்துப் பேச இயலும்.

கலை—மானானாலும், கலையேயானாலும், அதனால் ஒருவருக்கு அவர் நிலைமையில் ஏற்படும் கருத்து மற்றொருவருக்கு அவர் நிலைமையில் ஏற்படும் என்று கருதமுடியாது. வேடனின் வாழ்க்கை உண்மை, உயிர் வளர்க்கும் உணவு 'கலைமான்' என்ற உண்மை, முனிவரின் அழகுக் கற்பனையை உணர்த்தும் "கலைமான்" என்ற உண்மையை வெல்லக்கூடிய உண்மையுடையதன்றோ!

ஒரு பசுமையான வயல். பயிரின் கொழுமையும் செழுமையும் பச்சைக் கம்பளத்தை நிலமகள் போர்த்திக் கொண்டிருப்பது போலத் தோன்றுகிறது. அதன் வரப்பிலே ஓர் வெள்ளுடை இளைஞன்

நிற்கின்றான். அவன் அதன் பசுமைக் காட்சியையும், குளிர்ந்த காற்று வீசுகின்றபோது, பயிர் மேலுங் கீழுமாய் அசையுங்காலே, அதனிடத்துக் காணும் ஒழுங்கையும், முற்றியுள்ள கதிர்கள், பச்சைக் கம்பளத்தில் மஞ்சள் பட்டு நூலால் பூவேலை செய்யப்பட்டிருப்பது போலக் காட்சி யளிப்பதையும் கண்டு மகிழ்கின்றான். அவனுடைய கலையுள்ளம் அதனைப் பருகிக்கொண்டிருக்கிறது. அவ்வேளை, படபடவென்ற ஒலி கேட்கின்றது. ஒரு புறாக் கூட்டம் அந்தப் பயிரினிடத்தே இறங்குகின்றது. கதிர்களைக் கொத்துகின்றது. இளைஞனே, அந்த அழகிய மஞ்சள் பட்டு நூல் வேலையை - பச்சைக் கம்பளத்தில், வெள்ளிய முத்துக்கள் தூவியதெனத் தோன்றும் அக்காட்சியைக் கண்டு மெய் மறக்கின்றான். ஆனால் அப்படியே சிறிது நேரங்கூட அவன் கழிக்க இயலவில்லை.

பயிர் செய்த பாட்டாளி ஓடோடி வருகின்றான். உரக்கக் கூவுகின்றான், கலையுணர்வாளனைக் கண்ணற்றவன் என்று கருதுகின்றான். கலையுணர்வளித்த அக்காட்சி சிதைகிறது. பாட்டாளியின் கல்வீச்சால் கலைஞன் சிந்தனைகளும், சிதறிய புறாக்களைப் போலவே பறந்தன. பாட்டாளி அந்த வயல் விளைச்சலால்—தனது பெரிய குடும்பத்தை, மனைவியையும் மக்களையும்—காப்பாற்ற வேண்டியவன். அதன் விளைச்சல் இப்படிப் பாழாய்ப்போவது—கலையானாலும் அதைக் கலக்கத்தானே செய்கிறது அவன் வாழ்க்கை உண்மை? கலையை அழிப்பதா என்று அவன்மீது அறிவுடைய எவரும் வருத்தப்பட்டுக் கொள்ளமுடியுமா? கலையைவிட வாழ்க்கையிலேயே உரமும் உண்மையும் நிறைந்து காணப்படுகிறதல்லவா?

வேடனும், பாட்டாளியும் கலையின் விரோதிகள் என்று கூற முடியுமா? வேடன் வில்வித்தையிலே வலிவான உடற்கட்டிலே அழகிய மலைச் சாரலிலே கலையைக் காணுகிறான். பாட்டாளி பழங்கதையிலே, படத்திலே, பசுக் கூட்டத்திலே, கிளிப் பேச்சிலே குழந்தை மழலையிலே, கலையைக் காணுகிறான்; மகிழ்கிறான். ஆனால் வாழ்க்கையை எதிர்க்கும் கலை, எதுவானாலும் எதிர்க்கும் நேரத்திலே தோல்வியடைகிறது, சிதைகிறது. நல்லப்பாம்பு படமெடுத்தாடினால், பார்ப்பதற்கு அழகாகத்தானிருக்கிறது. அதன் ஆட்டத்திலே ஓர் கலையைக் காணலாம். ஆனால் அதனுடைய பல் பிடுங்கப்படாத வரையில் அந்தக் கலையிடத்தே நெருங்கமுடியாது அதுமட்டுமல்ல. அது கலையென்பதற்காக அதனை விட்டுவிட்டால் வேறோர் நாள் அக்கலை நம்மைத் தீண்டிவிடும்.

வைரக்கல்லும், தங்க நகையும் அழகுப் பொருட்கள்; கலையுணர்ச்சிக்குத் துணை செய்வன. ஆனால அதே அழகுப் பொருட்கள் ஆபத்துக்கும் துணையாகி விடுவதைக் காணுகின்றோம். ஆகவே இங்கெல்லாம், கலையே சில பல சமயங்களில் வாழ்க்கைக் கொலையாக முடிவதையும் காணலாம்—கலை வாழ்க்கையிலே வளத்தையும், மனத்திலே

எழுச்சியையும், உணர்விலே ஓர் இன்பத்தையும் ஊட்டுவதை நான் மறுக்கவில்லை. ஆனால் கலை யென்பதற்காக, கவலையின்றி அதனைக் கைக்கொள்வது தற்கொலையே யாகும்.

உதாரணமாக இசைக் கலையை எடுத்துக் கொள்வோம். இசை ஒரு சிறந்த கலை ; எவரையும் இசைவிக்கும் கலை ; எவரும் இழக்க விரும்பாத கலை ; ஆனாலும் சமண சமயத்தவர்கள் இசையை வெறுத்தார்கள் என்பதை அறிவோம். ஏன் ? இசைச் கலையில் இன்பத்துடன் மயக்கவைக்கும் ஒருவித தன்மையையும் கண்டார்கள். அவ்வாறு மயங்க நேரிடும்போது, அறிவு மயங்குவதை உணர்ந்து, இசையை வெறுத்தார்கள். ஆனால் நாம் இசைக்கலையையே குறை கூறவில்லை. இசைக்கலையால் ஏற்படும் மயக்கம், மக்களுடைய நன்மைக்காகவே இருக்க வேண்டுமேயன்றி மக்களைப் பாழ்படுத்துவதற்குத் துணையாகக் கூடாது என்றே கூறுகிறோம். உழைத்து அலுத்தோர், களைப்படைந்தோர், கவலைகொண்டோர் ஆகியோருக்கு இசை உணர்வு, இளைப்பாறுவதற்குப் பயன்படுவது நல்லதே. ஆனால் இசையிலேயே மயங்கி, ''ரோம் பற்றி எரிந்தபோதும் யாழ் வாசித்த நீரோபோல'' இசையின்பத்திலாழ்ந்து, கடமையை நிறைவேற்றாது, பிறர் உழைப்பை உறிஞ்சி சோம்பேறியாய் வாழ இசை துணையாகுமானால் அது கொடுமையாகும். இங்கே இசைக் கலைஞரை யான் குறிப்பிடவில்லை; இசை நுகர்வோரைத் தான்.

பெரிய பிளவை மருத்துவம் (ரண சிகித்சை) செய்வதற்கு முன்னால் மயக்க மருந்து கொடுக்கப்படுவது அவசியமானதே. சிறிய சிகித்சையானாலும், மயக்க மருந்து கூடுமானால், தேவையானால் கொடுக்கலாம். குழந்தையைத் தூங்கவைக்க, மயக்க மருந்து கொடுப்பது தவறு. அதைவிட உழைக்காமலே இருந்தும் அதை உணர்ந்தும் மாலை நேரத்திலே உயர்ந்த மேல் நாட்டுச் சரக்குகளிலே உலகினை மறக்க வழிதேடிக் கொள்வதுபோல ஒரு கூட்டத்தாருக்கு இசையுணர்வு அமையுமேயானால் அது அநீதி. கஞ்சாவும், அபினும்போல், மக்கள், வாழ்வினிலே தாழ, இசை துணையாகுமேயானால் அந்த இசை, உயர்ந்த கலையென்றாலும் வெறுக்கப்பட வேண்டியதேயாகும். இசை மருந்தல்லவே, மருந்தைப்போல மட்டும் பயன்படுத்த என்பர். அது ஒரு மருந்தாகவும் இருக்கிறது என்பதை அறிஞர் ஒப்புவர். அது மருந்து மட்டுமல்ல என்பதை, நான் ஒப்புகிறேன். ஆனால் அது பொதுவாகச் சமுதாயத்தின் களைப்பையும், சோர்வையும் நீக்கவேண்டிய மருந்து. மனப்புண்ணை நீக்கும் இன்னிசை மக்களிடை வளர்ந்த பல பண்புகளையும் நீக்கும் அருமருந்தாகப் பயன்பட முடியும். மருந்தல்ல-அமுதமென்றாலும் ஒப்புகிறேன். ஆனால் அமுதமானாலும் அளவிற்கு மிஞ்சினால் நஞ்சாகும் என்ற உண்மையை எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

இங்கே இசை ஒரு கலையென்ற வகையில் அதன் பொதுத் தன்மையை, விளைவைக் கண்டோம். இசையுணர்வு மிகுந்ததாலே தமது

(தமிழ்) இசையை மறந்தவரைக் கண்டோம்! தமிழிசை உரிமை பூண்டிருந்த மக்களுடைய மனதிலே கூடத் தெலுங்கிசை, குடியேறியதைக் கண்டோம்! தமிழ்ப்பாட்டைவிட தெலுங்குப்பாட்டே இசைக்குப் பொருத்தம் என்று தமது பேரிசை யுணர்வாலே பேசியோரைக் கண்டோம்! ஏன் இந்த விளைவு? இசைக்கலையின் உருக்கம் நம்நாட்டிலேயே நமது கலையையும் மொழியையும் மாற்றார்கலைக்கும் மொழிக்கும் மண்டியிடச் செய்தது; தமிழ்க்கலையை மறையச் செய்தது, தமிழ் மக்களை மாண்பிழக்கச் செய்தது. தமிழகத்தைப் பொருத்தவரையில், கண்மூடிய கலைக்காதல், இந்த நிலைக்குக் காரணமாயிற்று. கலையும், இந்த நிலைக்குள்ளாயிற்று. நாளடைவில் தமிழ்க்கலை, தாழ்வடைந்து விட்டது மட்டுமன்றி அழியவும் தலைப்பட்டது. ஆனால், வருங்காலம் தமிழ்க்கலை வளர்ச்சிக்கு உரிய காலமாவது மகிழ்ச்சிக்குரியதே.

இனி கலையென்றால் என்ன என்று காணவேண்டியிருக்கின்றது. கலையை உணர்வதுகூட கடினமல்ல, கலையை விளக்குவதே கடினம். கலையென்றால் அழகுணர்ச்சியைத் தோற்றுவிப்பது. உள்ளத்தைக் கவர்வது என்று உடனே கூறலாம். அழகுணர்ச்சியைத் தோற்றுவிக்கும் எல்லாப் பொருளும் கலையாகுமா? என்று எண்ணினால் இல்லையென்றே தோன்றுகிறது. ஏனெனில் அவையெல்லாம் கலையுணர்ச்சியைத் தோற்றுவித்தாலும் கலையென்று கூறப்படுவதில்லை. மற்றும், எல்லாப் பொருள்களும் எல்லோருக்கும் அழகுணர்ச்சியைத் தோற்றுவிப்பதில்லை. சிறந்த கலைஞனுக்கோ, எல்லாப் பொருளிடத்திலும் அழகுணர்ச்சி தோன்றுகிறது. எளிய மனிதனுக்கோ, உயர்ந்த பொருளிடத்திலும் அழகுணர்ச்சி தோன்றுவது அருமையாகிறது.

மனிதன், தான் வழக்கமாகச் செய்யும் செயல்களை எண்ணிப் பாராதது போலவே, தான் நெருங்கிய பழகும் பல பொருள்களையும் கூர்ந்து கவனிப்பதில்லை. ஆகவே, அவைகளிடத்தில் அழகுணர்ச்சி தோன்றுவதில்லை. ஆனால் கலைஞனின் பார்வையில், அந்தக் கலையுணர்வு இருப்பதாலேயே, நாம் கண்டு பழகியவற்றிலேகூட, நாம் கண்டறியாத புதுமையை வெளிப்படுத்துகின்றான். அழகையே நம் எதிரில் நிறுத்தினாலும் அழகு அழகாகத்தான் இருக்கும். ஆனால் கலைஞனின் எதிரில், அழகு-மறைந்து நின்றாலும்-அணங்கு போலச் சிரித்திடும். அணங்கின் சிரிப்பிலே-புரட்சிக் கவிஞர் அவர்கள், அழகினிடத்திலே கவிதை பெறுகிறார்; நாரெடுத்து நறுமலரைத் தொடுப்பாளின் விரல் வளைவில் நாடகத்தைக் காணுகின்றார், மற்றும் பலப்பலவும் கண்டார். கவிஞர் காண்பிக்காவிட்டால், இவைகளை நாம் காணுமாறுண்டோ?

ஆகவே கலையென்பது, மனிதனைச் சுற்றியுள்ள ஒவ்வொரு பொருளிலும், நிகழ்ச்சியிலும், அமைந்துள்ளது. உண்மையானாலும், அது, மனிதன் உள்ளத்தில் பதியும்போதுதான், உணர்வில் கலக்கும் போதுதான், கலையாகிறது. அந்த உணர்ச்சி தோன்றக் காரணமாவதையே நாம் 'கலை' யென்று வழங்குகிறோம்.

# காலன் வருகை

(போ. குருசாமி)

" ஐயோ பூவே வாடி வதங்கிக் கீழேயா கிடக்கின்றாய்? நேற்று நீ எங்கே இருந்தாய்! உன் அருமையான கொடித்தாய் உனக்கென பச்சைப் பசுந் தொட்டிலிட்டுச் சீராட்டினாள். உன்னை மகிழ்விக்க வண்டுச் சிநேகிதர்களைப் பல திசைகளிலிருந்தும் பாடிக்கொண்டு வரச் செய்தாள். உனக்காக இனிய உணவுகளைக் கொடுத்துத் தன்னைவிட உன்னை அழகாகப் போற்றினாள். நேற்று நீ என்ன அழகாக இருந்தாய்! பச்சைப்பசிய இலை வீட்டில் பார்த்தால் கவரும் நிறத்தோடு உன் அழகைப் பரப்பி யாவரையும் உன்பால் இழுத்தாய். உன்னைக் கண்டவர்கள் யாவரும் உன்னருகில் வந்து நீ தந்த இன்பத்தைப் பெற்றுச் சென்றனர். உன் கொடித்தாய் உன்னைப் படுக்கவைத்திருந்த தொட்டிலை இயற்கைத் தேவி தென்றலெனும் தன் மென்கர வீச்சால் ஆடச் செய்தாள்; நீயும் மகிழ்ந்தாய் உன் ஆட்டங்கண்டு காட்டங்கொண்டவர்கள் இத்துணையோ பலர்! ஆனால் இன்று உன்னை நாடி வருவோர் யாருமிலரே! ஓடி ஓடி வந்து நேற்று உன்னை நாடியவர்களுள் ஒருவராவது இன்று உன் நிலைக்காக வருத்தப்படவில்லையே! அதோ உன் தாய் பயந்த - உன்பின் தோன்றிய - மலரை நாடி யாவரும் செல்கின்றனர். உன்னை எவரும் மனதில்கூட நினைக்கவில்லை. வண்டு நண்பர்கள் நேற்று உன்னைச் சுற்றிச்சுற்றி வந்து பாடினர். அந்தோ! இன்று ஒரு வண்டுகூட உன்னிடம் உண்ட தேனைப் பற்றிக்கூட கருதவில்லை போலிருக்கின்றதே! இவ்வளவு தானா அவர்கள் உன்னிடங் கொண்ட அன்பு! இயற்கைத்தேவி நேற்று உனக்காகத் தென்றல் ஊதித் தொட்டிலாட்டினாள்; அவளே இன்று அதே காற்றால் உன் இதழ்களை உதிரச் செய்து விட்டாளே! காலம் வந்துவிட்டால் யாராக இருந்தாலும் இப்படித்தானாக வேண்டும் போலிருக்கிறது. நேற்று உன்னிடமுள்ள தேனைப் பருக வேண்டுமென்று நினைத்து எறும்புகள் உன்மேல் ஏறி வந்தன; உன் தாய் ஒரு குலுங்குக் குலுங்கி அவற்றைக் கீழே தள்ளிவிட்டாள். ஆனால் இன்று உன் ஒவ்வொரு இதழையும் எறும்புகள் இழுத்துச் செல்லுகின்றன. உன்தாய் அவற்றை ஒன்றும் செய்யவில்லை. நேற்று உன் அழகால் இழுக்கப்பட்டு உன்னருகில் நான் வந்தேன். எங்கே உன்னைக் கிள்ளி விடுவேனோ என்று உன் தாய் பயந்து சலசலப்புச் சத்தத்தால் அழுதாள். நான் உன்னைக் கிள்ளாமல் மூக்கால் முகர்ந்து ஒரு முத்தமிட்டுத் திரும்பினேன். இதைக் கண்ட உன் தாய் மகிழ்ந்து குலுங்கினாள். ஆனால் இன்று எத்தனை பேர் உன்னை மிதித்து மிதித்துச் செல்கின்றார்கள்! ஆனால் ஏன் உன் தாய் வருந்துவதாகக் காட்டிக்கொள்ளவில்லை? காலம் வந்துவிட்டால் யாராக இருந்தாலும் மறந்துதான் விடவேண்டும் போலிருக்கிறது!

" நேற்று என்ன அழகாக இருந்தாய்! வெல்வெட்டுத் திரைமேல் மின் விளக்குப்பட்டால் எப்படி மினு மினுவென மின்னுமோ அப்படிப் பளபளவென்று நேற்று விளங்கினாய். உன் இதழ்களின் ஒவ்வொரு வளைவும் என்னென்னவோ மாதிரியாக அழகு தந்து கொண்டிருந்தது. சிறந்த நாட்டியக் கலைஞர்களின் உடல் வளைவுகள் பெறாத மகிழ்ச்சியை உன் இதழ்களின் வளைவுகள் தந்துகொண்டிருந்தன. வெற்றிக் கொடி போல் தலைநிமிர்ந்து உன் நடுவில் நேற்று ஒரு நரம்பு விளங்கியதே, அதன் அழகுதான் எவ்வளவு! கொடியின் உச்சியில் கட்டப்படும் மணிகள்போல் சின்னஞ்சிறு மகரந்தப் பைகள் விளங்கினவே, அவற்றின் அழகுதான் என்ன! தலைதூக்கி நின்ற கொடிமரம் இன்று குனிந்து வளைந்து வாடிக்கிடக்கின்றது! மகரந்தப் பைகள் இருந்த இடம் தெரியாமல் மறைந்து விட்டன! உன் இதழ்களெல்லாம் எங்கள் வீட்டுச் சிறு பையன் - இனியன் - கையிலகப்பட்ட தாளைப்போல் கசங்கிக் கிடக்கின்றன! ஈரப்பசையற்று வாடி வதங்கிவிட்டன! நேற்று விளங்கிய - மலர்ந்து பரந்து விளங்கிய மலரா என்று ஐயுறும் படி கிடக்கின்றாய்! அழகைக் காணோம்; மணத்தைக் காணோம்; இளமையைக் காணோமே. காலம் வந்துவிட்டால் எல்லாம் தொலைந்து போகத்தான் வேண்டும் போலிருக்கிறது."

---


# மிட்லண்டு இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி

**லிமிடெட்.**

**தலைமை ஆபீஸ்: 13-14, செகண்டு லைன் பீச், சென்னை**

**போர்ட் ஆப் டைரக்டர்ஸ்:**

**ஸ்ரீ.** கே. வேங்கடசாமி நாயுடு, பி.ஏ.,பி.எல்., டெப்டி பிரசிடெண்ட், மெட்ராஸ் லெஜிஸ்லேட்டிவ் கவுன்சில்.

**ஸ்ரீ.** ஆர். ரவைமாணிக்கம் முதலியார், ப்ரொப்ரைடர், ரவை அண்டு சன்ஸ், மதராஸ்.

**ஸ்ரீ.** எம். சத்தியநாராயணா, செக்ரட்டரி, இந்துஸ்தானி பிரசார் சபா, மதராஸ்.

**ஸ்ரீ.** ஏ. வி. ராகவ ராவ், எம்.எஸ்சி., பி.இ, பெஜவாடா.

**ஸ்ரீ.** சி. சுப்பிரமணியம், பி.ஏ.,பி.எல்., கோயம்புத்தூர், மெம்பர் கான்ஸ்டிட்யூயன்ட் அசெம்ளி.

டைரக்டர், தி ஜெயபூர் சுகர் கம்பெனி லிட், தி ஜெயபூர் மைனிங் சிண்டிகேட் லிமிடெட்.

**1946-ல் புது பிஸினெஸ் 100-க்கு 100 அதிகம்**

✻

**இந்த முன்னேற்றத்திற்குக் காரணம் கம்பெனி தன் பிரதிநிதிகட்கு அளிக்கும் இணையற்ற பயிற்சி வசதிகளும் முழுமன ஒத்துழைப்புமே.**

✻

**இந்தப் பயிற்சியும் ஒத்துழைப்பும் எத்தகையது என்பதை மாதிரி பாருங்கள். பின்னால் உங்கள் பூரண வெற்றியை நீங்களே மாதிரி பார்ப்பீர்கள்.**

# கன்னட நாட்டில் கலைவளர்ச்சி

(தமிழன்)

கைவருந்திப் பாடுபடுவன் தமிழன். காட்டையும் மேட்டையும் திருத்தி நாடு சமைப்பவன் தமிழன். தேயிலைத் தோட்டத்தில் வருந்தி வாடுபவன் தமிழன். அவனுக்குச் சோம்பல் என்பது பொருளற்ற ஒன்று. அவன் இருக்குமிடம் என்றும் செழிப்புற்றிருக்கும். பார்மாவில் காடுகொன்று நாடாக்கி நலம் கண்டவன் தமிழன். இலங்கையில் இவன் ஆற்றிய உழைப்பின் பயனே இன்றைய இலங்கைச் செல்வ மாகிறது. தென்ஆப்பிரிக்காவில் இவன் கைவண்ணம் செல்வம் நல்கியது. இவை கடல் தாண்டி !

இந்திய நாட்டிலும்கூடத் தமிழன் தன் உழைப்பையும் அறிவையும் பலன்படுத்தி உயர்ந்த பணிகள் ஆற்றியுள்ளான். தமிழ்நாட்டு அண்மையிலுள்ள மைசூர் நாட்டில் கோலார் தங்கவயலில் அவன் செய்யும் செயல் அறிவார் அனைவரும். ஆம் ! அங்கு கன்னடநாட்டில் - அத் தமிழன் கைத்திறன், தொழில்முறை உழைப்பு வேறொரு இடத்தில் விளக்கம் பெறுகின்றது. அங்கு கல் இரும்பாக்கப்படுகிறது. இரும்பு எஃகாக்கப்படுகிறது. எஃகு பலப்பல பொருள்களாக மாற்றப்படுகிறது. இரும்புக் குழாய்கள் செய்யப்படுகின்றன. சிமிட்டி செய்யப்படுகிறது. காகிதமும் செய்யப்படுகிறது. இவை அனைத்தும் ஒரே இடத்தில் - கன்னடநாட்டில் - பத்ராவதியில் தமிழன் கை உழைப்பால் நடை பெறுகிறது.

பத்ராவதி இரும்புத் தொழிற்சாலையில் உள்ள மக்களில் பெரும் பாலோர் தமிழர். அங்கு உள்ள கன்னடவரும் கலந்துபணியாற்றுகின்றார் எனினும் உழைப்போர் எண்ணிக்கை தமிழினத்திலேயே அதிகமாகக் காண்கின்றது. ஊர்விட்டு ஊர்சென்று - நாடுவிட்டு நாடுதாண்டி உழைத்து நின்றாலும்கூட அப்பத்ராவதித் தமிழ்மக்கள் தம் கலையை மொழியை - நாகரிகத்தை - பண்பாட்டை - மறவா நிலையில் வாழ்வது கண்டு மகிழ்வெய்தாதிருக்க முடியுமோ? அந்த ஊர் எல்லையில் தமிழ் நாட்டில் தாண்டவமாடும் எந்த வேறுபாடும் இல்லை. பிறப்பால் உயர்வு தாழ்வு, பணியால் உயர்வு தாழ்வு, பொருளால் உயர்வு தாழ்வு-அன்றிக் கட்சியால் உயர்வு தாழ்வு எனப் பல வேறுபாடுகளைக் கற்பித்துக் கொண்டு தமிழ்நாட்டைப் பாழ்படுத்தும் வெப்புநோக்கு அந்த ஊரில் இல்லை என்பதை அறிய உண்மைத் தமிழன் அகமகிழ்வான். பணி புரியச் சென்ற இடத்தே அனைவரும் ஒருங்குகூடிக் கலைப்பயிரை ஓம்புகின்றனர். அவர் தம் பணி சிறப்பதாக என்று ஒவ்வொரு தமிழ் உள்ளமும் வாழ்த்தல்வேண்டும்.

பத்ராவதியில் தமிழ்ச் சங்கம் ஒன்றுண்டு. அதன் தலைவர் திரு. P. R. பாலகிருஷ்ணன் அவர்கள். தமிழ் உள்ளம் படைத்தவர்கள். ஆங்கில, அமரிக்க நாடுகளுக்கெல்லாம் சென்று தொழில் நலம் கண்டு

வந்தவர்கள். அங்குள்ள இரும்புத் தொழிற்சாலைகளுக்கெல்லாம் துணைத்தலைவராக இருந்து அனைத்தையும் இயக்குவிப்பவர்கள். உயர்ந்த செல்வ நிலையில் இருந்தும், பதவி வகித்தும் அவற்றை எல்லாம் எண்ணாது அனைவருடனும் ஒன்றிக் கலந்து தமிழ் வளர்க்க முற்பட்டு அத்தமிழ்ச் சங்கத்தின் தலைவராக அமர்ந்துள்ளார்கள். அவர்களோடு அவர்தம் பணிக்கு இரும்புத் தொழிற்சாலையில் உறுதுணையாயிருந்து உதவுபவர்கள் யாவரும் - இக்கலைப்பணிக்கும் உறுதுணையாக உள்ளார்கள். பொதுச் செயலாளராகத் திரு. வேலாயுதம் அவர்கள் அமைந்து பணியைச் சொல்லில் அல்ல, செயலளவில் வெற்றிபெறச் செய்துள்ளார். அவர் தம் அரும்பணியும், மற்ற துணைத் தலைவர்கள் பிற உறுப்பினர்கள் உடன்பணியும் ஒன்று கலந்து கன்னடநாட்டில் கலைப்பயிரைத் தமிழ்க்கலையைத் தலைதூக்கி நிற்கச்செய்கின்றன. வாழ்க அவர்தம் வளஞ்சால் தமிழ்ப்பணி !

பத்ராவதி தமிழ்ச் சங்கத்தின் ஆண்டுவிழா கடந்த 15-6-47 ஞாயிறன்று நடைபெற்றது. தமிழ்நாட்டில் கலைப்பயிர் ஓம்பும் - வாலாஜாபாத் வள்ளலார் இல்லத்தலைவர் - இந்துமத பாடசாலையின் முகவர் திரு. வா. தி. மாசிலாமணி அவர்கள் தலைமை வகித்தார்கள். திருவாளர்கள் ஆம்பூர் ஆ. மா. சிவஞானம், சென்னை பாஷ்யராமநுஜம், மணிமொழியார், அன்பு கணபதி, அ. மு. பரமசிவானந்தம், பெங்களூர் சோமசுந்தரனார், கோலார் அப்பாதுரையார் ஆகியோர் தமிழ்மொழி வளத்துக்குரிய பலவேறு பொருள்களைப் பற்றி விரிந்த உரைகள் நிகழ்த்தினார்கள். பொழிவுகளுக்கு இடையே தமிழ் இசைவிருந்து இருந்தது. தமிழ்இசை தமிழ்நாட்டில் வளர்க்கப் பல பாடும்பட்டும் முற்ற வளரா நிலையில் அங்கு தமிழ்இசை இனிமையுற வளர்ந்துள்ளது. சிறந்த செல்வியர்தம் இசைப் பொழிவும், பேச்சாளர்தம் உரைப் பொழியும் தலைவர்தம் கருத்துரையும் அனைவரையும் மகிழ்வித்தன. அன்று பத்ராவதி விழா கொண்டாடிற்று. விழா சிறப்புற நடந்தது. தமிழ்க் கலை வளர்க்க ஒல்லும் வகையில் உழைக்க அந்நாட்டு மக்கள் உறுதிகொண்டனர்; உரம்பெற்றனர். தலைவரும் பிறரும் சென்னையிலிருந்து சென்றவர்களிடம் காட்டிய அன்பும் பண்பும் என்றென்றும் மறக்கற்பாலதன்று. அவர்கள் பன்னெடுநாள் பழகிய பண்பாளராயினர். புறப்படுங்கால் திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் நடத்திய விருந்தில் ஒருவர் கூறியபடி, 'உவப்பத் தலைகூடி உள்ளப் பிரியும்' நிலையிலே நாங்கள் பிரியா விடைபெற்றுப் பிரிந்தோம். எங்கள் உள்ளம் பத்ராவதியை என்றும் மறவாது. அவர்தம் உள்ளம் தமிழ் அறிஞரை என்றும் வருக என்று வரவேற்கும். உள்ளங்கள் ஒன்றுபட்டன. இனி உழைப்பின் பலன் உயரும். பத்ராவதி மக்கள் பணி நல்ல பலன்தரும் நாட்டுக்கு ! வாழ்க அவர்தம் வளஞ்சால் பணி ! வளர்க அவர்தம் அருமொழித்தொண்டு ! கலைநலம் சிறக்க ! கற்றவர் நிறைக !

சிறு கதை

# இவள் யார்?

[ந. சஞ்சீவி]

செல்வம் : சாந்தி ! இவ்வளவு சீக்கிரம் எப்படி நீ என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டாய் ?

சாந்தி : செல்வம் ! இவ்வளவு விரைவாக எப்படி நீ உன் உள்ளத்தைப் பறி கொடுத்தாய் ?

செல்வத்தின் கரங்களில் சாந்தி சாய்ந்து கொண்டிருந்தாள்— 'கலைஞன் கையில் வீணையைப்போல.

செ : சாந்தி ! உனக்கென்ன கூச்சம் என்பதே கொஞ்சம் கூடக் கிடையாதா ?

சா : செல்வம் ! காந்தத்தின் முன் இரும்புக்கு என்ன சக்தி இருக்கும் ?

* * * *

மாலை நேரம். கண்ணுக் கெட்டிய தூரத்தில் கடலலைகளின் மத்தியிலிருந்து பூர்ண சந்திரன் உதயமாகிக் கொண்டிருந்தான். சாந்தி தன் தாமரை இதழ்களை ஒத்த கண்ணிமைகளை மூடிக்கொண்டிருந்தாள். அவள் உறங்கவில்லை ; உணர்விழந்து உலகத்தையே மறந்திருந்தாள். சந்திரன் மெல்லிய மேகத்திரையிடையே தன் முகத்தை ஒளித்துக்கொண்டான்—இரண்டு காதலர்கள் கூடியிருக்கும் இன்பக் காட்சியைக் கண்டு நாணமடைந்த பெண்போல.

செ : சாந்தி ! இன்னும் மூன்று மாதங்களில் உனக்குப் பரீட்சை முடிந்துவிடும் அல்லவா ?

சா : ஆமாம்.

செ : எத்தனை நாளைக்கு சாந்தி, நாம் இப்படியே இருப்பது ? திருமணம் செய்து கொள்ள வேண்டாமா ?

சாய்ந்து கொண்டிருந்த சாந்தி எழுந்து உட்கார்ந்தாள். செல்வத்தின் கையைத் தன் இரண்டு கைகளாலும் ஆவலோடு பிடித்துக் கொண்டு, " செல்வம், வருத்தப்படாதே, பொறுமையாகக் கேள் " என்று பேச்சாலேயே பெரிய வெற்றியை சாதிக்கப் போகின்றவள் பேசத் தொடங்கினாள்.

" செல்வம் ! என்னுடைய லக்ஷியம் உனக்குத் தெரியும். என் உள்ளக் கொந்தளிப்பின் வேகத்தை நீ அறிவாய். தேசத்தின் போராட்டமே என் உள்ளப் போராட்டம் என்பது உனக்குத் தெரியாதா ? திருமணம் செய்து கொண்டு, குடும்ப வாழ்க்கையைத் தொடங்குவதன் மூலம், என் உயர்ந்த லக்ஷியத்தையே நான் உடைத்தெறிய வேண்டுமா ? கோடிக்கணக்கான குடும்பங்களின் துன்பத்தைத் தொலைக்கும் போராட்டத்திலே இறங்கியிருக்கின்ற நான், நம் ஒரு குடும்பத்திற்காக என் வாழ்க்கையையே சுருக்கிக்கொள்ள வேண்டுமா ?

செல்வம்! கலையுள்ளம் படைத்த உனக்கு என் உள்ளத்தை உணர்ந்து கொள்வது அருமையா?

ஒரு நாளைக்கு நாம் கட்டாயம் திருமணம் செய்துகொள்வோம். ஆனால், அந்த நாள் இந்ததேசத்தின் சுதந்திரத் திருநாளாக இருக்கட்டும். நம் திருமணவேள்வி, தேசமக்களின் தியாகத் தீயின் முன்பு நடக்கட்டும்.

மௌனமாகக் கேட்டுக்கொண்டிருந்த செல்வம் பேசத் தொடங்கினான்.

சாந்தி! உன் விருப்பத்தை நான் ஏன் தடைசெய்ய வேண்டும்? என்னைவிட லக்ஷியம் பெரிது; குடும்பத்தைவிட தேசம் பெரிது; அன்பைவிட அருள் பெரிது; காதலைவிடச் சுதந்திரம் பெரிது.

சாந்தி! கலைத்தெய்வம் உன் லக்ஷியம் நிறைவேற துணைபுரியட்டும். விடுமுறையைக் கழிக்க நான் ஊருக்குப் போகிறேன். பிரிகிறோம்; மறந்து விடாதே.

சாந்தியின் பட்டு போன்ற கூந்தலைத் தடவிக்கொண்டே ஒவ்வொரு வார்த்தையாகப் பேசினான் செல்வம்.

## 2

சாந்தி சென்னையில் உள்ள "அறிவாலயம்" என்ற பள்ளியில் படித்துக் கொண்டிருந்த இளம் பெண். வயது பதினாறிருக்கும். சிவந்த மேனி; அடர்ந்த கூந்தல்; அகன்ற கண்கள்; தன்னையொத்த தோழியர்களும் கண்டு அவாவுறும் பேரழகு. சாந்தி மெதுவாக நடப்பாள்; வேகமாகப் பேசுவாள். நண்பர் மத்தியில் குழந்தைப்போல் கொஞ்சுவாள்;

காவலர் முன்னே சிங்கம் போல் கர்ஜிப்பாள். அவள் கண்களில் கருணையின் ஒளி வீசும்; உள்ளமோ குமுறிக் கொண்டே இருக்கும். அவள் பெயர் 'சாந்தி'; மாணவிகள் மத்தியில் அவள் செய்தது 'புரட்சி'. வெறி பிடித்தவள் சாந்தி! என்ன வெறி? சுதந்திர வெறி!

செல்வத்திற்கு சொந்த ஊர் கோமுகிக் கரையில் உள்ள முடியனூர். சாந்தியைவிட ஒரு பிடி உயரமாக இருப்பான் செல்வம். மாநிறம்; முழுக்கை வைத்த கதர் 'ஜிப்பா'; கலையொளி வீசுகின்ற அழகும் இளமையும், அமைதியும் தவழும் முகம்; கரிய அடர்ந்த புருவம்; உற்றுக் காண்பார் உள்ளத்தை ஊடுருவிச் செல்லுகின்ற ஒளி நிறைந்த கண்கள்; ஒரு கலைஞனின் ஆழ்ந்த சிந்தனையின் வேகத்தை எடுத்துக் காட்டும் கோடுகள் விழுந்த பரந்த நெற்றி; அகன்ற மார்பு; நிமிர்ந்த நடை;—இதுதான் செல்வத்தின் வெளித்தோற்றம். அவன் உள்ளம் கலையுள்ளம். வாழ்க்கையையே கலைவடிவாகக் காணக்கனவு கண்டு கொண்டிருந்தது அவன் மனம். சென்னையில் மாணவர்கள் ஆங்காங்கே நடத்தி வந்த கையெழுத்துப் பிரதிகளுக்குக் கண்ணையும், கருத்தையும் கவரும் அழகான படங்களை அன்போடு எழுதித் தருவான் செல்வம்.

புகழுக்காகவும், பணத்திற்காகவும் பெரிய பத்திரிகை ஆசிரியர்களி டம் அவன் தன் கலையை—உயிரை—விலைகூற விரும்பவில்லை.

சாந்தியைப் போலவே வெறி பிடித்தவன் செல்வம்.

ஆனால், என்ன வெறி? கலைவெறி. சாந்தியின் உள்ளத்தில் எரி மலையின் வேகம் இருந்தது. செல்வத்தின் உள்ளத்திலோ குற்றால அருவியின் வேகம் இருந்தது. உள்ளத்திலே 'சாந்தி' பெற்ற செல்வம் சாந்தியையே காதலித்தான். 'அமைதி'யையே வாழ்க்கையில் அறியாத சாந்தி செல்வத்தைக் காதலித்தாள்.

சாந்தியின் காதல் செல்வத்தின் உள்ளத்தில் கலைப்பயிரை வளர்த்தது. காதல் உணர்வால் அவன் கலையுள்ளம் தழைத்தது.

## 3

கடற்கரையில் சாந்தியிடம் விடைபெற்றுக் கொண்ட செல்வம் விடுமுறையைக் கழிக்க முடியனூர் வந்திருந்தான். ஊருக்கு வந்ததும் கலையுணர்வு நிறைந்த கடிதங்களை சாந்திக்கு எழுதினான். ஒவ்வொரு நாளும் சாந்தியிடம் இருந்து பதில் வரும் வரும் என்று எதிர்பார்ப்பான். இரவெல்லாம் சாந்தி 'அதைப்பற்றி எழுதுவாள்; இதைப் பற்றி எழுதுவாள்' என்று கற்பனை செய்துகொண்டிருப்பான். ஆனால், அவன் கனவு 'கனவாக'வே இருந்தது. கடிதம் மட்டும் வரவே இல்லை. காலையில் மணி பத்தானதும், தெருவாசலில் வந்து நிற்பான். தபால்காரனைக் கண்டதும் ஆவலோடு 'எனக்குக் கடிதம் ஏதாவது இருக்கிறதா' என்று கேட்பான். 'ஒன்றும் இல்லிங்க' என்பான் தபால் காரன். ஏமாற்ற மடைவான். கடிதம் வரவில்லையே என்ற வருத்தத் தால் தபால்காரனைக் கண்டால் கூட அவனுக்கு வெறுப்பாக இருக்கும்.

சாந்திக்குக் கடுமையான காய்ச்சல் கண்டு படுத்திருப்பதாகவும், தான் அவளைக் காணப்போவதாகவும், படுக்கையில் கிடந்த சாந்தி தன் னைக் கண்டதும் 'செல்வம்!' என்று ஆவேசத்தோடு எழுந்து அணைத் துக் கொள்வதைப் போலவும் கனவுகள் காண்பான்.

ஏமாற்றத்தாலும், கவலையாலும், தான் பித்தனைப்போல் ஆகிவரு வதை நன்றாக உணர்ந்தான் செல்வம். வருத்தத்தின் மிகுதியால் துரும்பு போல் ஆகிவிட்டான்.

ஆனால் தூண்டிற் புழுவினைப்போல் செல்வம் துடித்துக் கொண்டி ருந்ததை சாந்தி எப்படி அறிவாள்? அவள்தான் கடற்கரையில் செல் வத்திற்கு விடைகொடுத்து அனுப்பிய அப்பொழுதே காதல் எண்ணங் களுக்கும் விடை கொடுத்து அனுப்பிவிட்டாளே. என்றாலும் சாந்தியை செல்வத்தால் மறக்க முடியவில்லை. ஆனால், அவன் மனப்போராட்டம் மட்டும் நாளுக்கு நாள் ஓய்ந்து கொண்டே வந்தது

காதல் உலகில் கண்ட சாந்தியை கலையுலகில் காணத்தொடங்கினான் செல்வம். சாந்தியின் தேனிதழ்களை முத்தமிட்டு மகிழ்ந்த அவன் உதடுகள் 'பேசரிய இந்தப் பித்துடன் நான் பிரியாத கண்பனம்மா' என்ற முணு முணுக்கத் தொடங்கின.

## 4

'புத்தாண்டு' என்றோ, 'பொங்கல்' என்றோ, 'தீபாவளி' என்றோ, ஏதாவது வந்து விட்டால் கலைஞர்களுக்கு உண்டாகும் எக்களிப்பைச் சொல்லி முடியாது. கற்பனைச் சிறகுகளைப் பூட்டிக் கொண்டு, காவிய விண்ணில் பறக்கத் தொடங்கி விடுவார்கள். ஏழெட்டு நாட்களே இருந்தன புத்தாண்டு பிறப்பதற்கு. செல்வத்தின் மனதைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமா? அவன் உடல்தான் முடியனூரில் கிடந்தது. உள்ளமெல்லாம் சென்னையிலிருந்தது. என்னதான் வருத்தம் இருந்தாலும் செல்வத்தால் சாந்தியை வெறுக்க முடியுமா? அவள் உண்மையில் கடிதம் எழுதவில்லை. குற்றம்தான். ஆனால் அதில் எவ்வளவு பெரிய நன்மை! செல்வத்தின் உள்ளத்தில் அவள் ஒரு கணம்கூட ஓய்வின்றிக் காட்சி அளித்துக்கொண் டிருக்கவில்லையா?

புத்தாண்டிற்கு நல்ல பரிசு ஒன்றை சாந்திக்கு அனுப்ப விரும்பினான் செல்வம். கலைச்செல்வத்தைத் தவிர வேறென்ன அவன் கையில் இருக்கிறது பரிசளிக்க. சாந்தியைப்போலவே அழகான படமொன்று எழுதி அதையே அவளுக்கு பரிசாக அனுப்ப ஆசை கொண்டான்— ஓவியக் கல்லூரியில் பரீட்சைக்காகவும், இயற்கை அன்னையின் மடியில் 'கலை'க்காகவும் பயிற்சி பெற்ற செல்வம், நல்ல நண்பர்களை மறந்தான்; விரிந்த உலகையும் மறந்தான். அவன் கண்ட ஒரே கோயில்— "காதற் கோயில்"; அதில் குடிகொண்டிருந்த ஒரே தெய்வம்— சாந்தி. கலைத்தெய்வத்தின் முழு அருளையும் பெற்ற செல்வம், தன் காதல் தெய்வத்தை உயிரோவியமாகத் தீட்டத் தொடங்கினான். இரவு பகலாக தன் சிந்தனையை எல்லாம் அதற்கே அர்ப்பணித்தான். எடுத்த காரியத்தில் பரிபூர்ணமாக வெற்றி அடைய வேண்டும் என்ற காரணத்தால் கலைத் தெய்வத்தின் முன் தன் உயிரையும் காணிக்கையாக வைக்க அவன் சம்மதித்திருந்தான்.

ஆனால், கலைத் தெய்வத்தின் கண் திருஷ்டியே அவனுக்குப் பட்டு விட்டது போலும்! திடீரென்று கடுமையான காய்ச்சல் கண்டது செல்வத்திற்கு. படுக்கையை விட்டு எழுந்திருக்கவும் முடியவில்லை. படுத்திருந்த அறையில் தன் முகத்தெதிரே சாந்தியின் படம் உயிரோவியமாகக் காட்சியளித்துக் கொண்டிருந்தது.

வீரம் நிறைந்த பார்வைகொண்ட விழிகள்; பட்டுபோன்ற கரிய கூந்தல்; முகத்தின் அழகிற்கே ஜீவனாக இருந்த 'சாந்துப் பொட்டு'; பவழம்போல் சிவந்த உதடுகள். எப்படித்தான் வரைந்தானோ செல்வம்? கையும், கண்ணும் ஒன்றாக ஓவியமா வரைந்தான் செல்வம்? உள்ளத்தையே வரைந்திருந்தான்!

நோயுற்றுப் படுத்திருந்த செல்வத்தின் கண்கள் சாந்தியின் படத்திலேயே பதிந்திருந்தன. செல்வத்திற்குக் காய்ச்சல் நாளுக்கு நாள் அதிகரித்தது. நண்பர்கள் ஆவலோடு செல்வத்தைக் காண வந்தார்கள்.

செல்வம் தன் எதிரே இருந்த படத்தை யார் கண்ணிலும் படாதபடி ஒரு மெல்லிய கதர்த் துணியால் மறைத்திருந்தான். யாருடைய 'கண் திருஷ்டி'யாவது சாந்தியின் மேல் விழுந்து விடுமோ என்று பயந்தான் போலும்! நாளுக்குநாள் அதிரிகரித்த ஜுரம் செல்வத்திற்கு ஜன்னி பிறக்கும்படிச் செய்துவிட்டது. மணிக்கணக்காக தன்னுணர்வு இழந்து கிடந்தான் செல்வம். பித்தன்போல் பிதற்றுவான். ஜன்னி வேகம் தாங்காதபடி "சாந்தி" "சாந்தி" என்பதே அவன் கூக்குரலாகிவிட்டது.

## 5

சின்ன ஒரு அறை. அறையின் ஒரு மூலையில் மங்கிய ஒளியோடு விளக்கொன்று எரிந்துகொண்டு இருந்தது. அறை முழுவதும் அமைதி குடிகொண்டிருந்தது. மேல்மூச்சு விட்டுக்கொண்டிருந்த செல்வம் பிதற்றிக் கொண்டே படுத்திருந்தான். அவனெதிரே திரை மூடியிருந்த சாந்தியின் படம் மாட்டப்பட்டிருந்தது. வேதனை தாங்காமல் "சாந்தி" "சாந்தி" என்று முணகிக் கொண்டிருந்த செல்வத்தின் கையைப் பிடித்துக்கொண்டு "செல்வம்! அலட்டிக் கொள்ளாதே; பொழுது விடியட்டும்; சாந்தி வந்துவிடுவாள்" என்று ஆறுதல் சொல்லிக்கொண்டிருந்தான் அவன் உயிர்த்தோழன் மணி.

## 6

பொழுது விடிந்தது. அறை முழுவதும் நிசப்தமாக இருந்தது. எலும்புந் தோலுமாகக் கிடந்தான் செல்வம். உயிரோடு போராடிக் கொண்டிருந்த செல்வம் விடும் 'மேல்மூச்'சின் சப்தம்தான் அறையில் குடிகொண்டிருந்த நிசப்தத்தைக் கலைத்துக் கொண்டிருந்தது. நம்பிக்கை யிழந்த பார்வையோடு கண்களில் நீர் கலங்கப் பக்கத்தில் இருந்தான் மணி.

திடீரென்று அறையின் கதவுகள் திறந்தன. செல்வத்தின் கண்களும் விழித்தன. அறை வாசலில் யாரோ ஒருவன் வெறி பிடித்தவன் போல் "சாந்தி - சாந்தி" என்று கத்தும் குரல் கேட்டது. செல்வத்தின் கண்கள் சுழன்றன. "சாந்தி - சாந்தியா? - யார்? - என் சாந்தி! - அவள் பெயரைச் சொல்வது யார்? - சாந்தி - இல்லை; சாந்திதான்" என்று எண்ணமிட்டுக்கொண்டே சுழன்றது செல்வத்தின்மனம்.

மணியின் நண்பன் வேணு அறைக்குள் வேகமாக நுழைந்தான். "மணி! மணி! பார்த்தாயா தேச பக்தியை?" என்று தன் கையில் இருந்த தினசரிப் பத்திரிகை ஒன்றைப் பிரித்து, "தேசத்திற்காக உயிர் விட்ட சத்தியாக்கிரகி" என்று தலைப்பிட்டு, ஒருசிறு பெண்ணின் படத்தோடு வெளியிடப்பட்டிருந்த செய்தியை உரத்த குரலில் படித்தான் வேணு.

" சுதந்திர இயக்கத்தில் தீவிரமாக ஈடுபட்டதற்காக " சாந்தி " என்ற மாணவி சில தினங்களுக்கு முன்பு கைது செய்யப்பட்டாள். விலங்கிடப்பட்டுச் சிறைச்சாலைக்கு கொண்டு போகப்பட்ட சாந்தி உண்ணாவிரதம் இருக்கத் தொடங்கினாள். மாணவிகள் கூட்டம் கூட்டமாகச் சென்று சாந்தியின் மனதை திருப்ப முயன்றார்கள். அவர்களுக்குச் சாந்தி,

" நான் ஒரு சத்தியாக்கிரகி, என் மானத்தையும், சுயமரியாதையையும் நான் விற்கமாட்டேன். நீங்கள் இருப்பது " தேசம் " என்ற பெரிய சிறைச்சாலைதான். நீங்களும் கைதிகள்தான். உங்கள் போராட்டத்தை நீங்கள் வெளியே நடத்துங்கள். விலங்கு பூட்டப்பட்டிருக்கும் நான் என் போராட்டத்தை சிறைச்சாலைச் சுவர்களுக்கு மத்தியிலேயே நடத்துவேன். என்னைக் " கைது " செய்யும் உரிமை யாருக்கும் இல்லை. " கைதி "யாக நான் வாழ்வதைவிட சாவதேமேல், சாகும்வரை உண்ணாமல் இருப்பேன். உயிர்போகும்வரை போராடுவேன். நான் சத்தியாக்கிரகி என்று பதிலளித்தாள் சாந்தி. தேசத்திற்காக உண்ணாவிரதம் இருந்த சாந்தி நேற்று மாலை உயிர் துறந்தாள்" என்று செய்தியைப் படித்தான் வேணு.

செல்வத்தின் தலை சுழன்றது. தன் ஒரே பிள்ளையைப் பறிகொடுத்த நேரத்தில் தலையில் அடித்துக்கொள்ளும் கண்ணிழந்த பிச்சைக்காரியின் தலைமயிர் பிய்க்கப்படுவதுபோல், செல்வத்தின் மனம் சின்னா பின்னமாகப் பிய்ந்தது.

வேணுவையும், மணியையும் மாறி மாறிப் பார்த்துக்கொண்டிருந்த அவன் கண்கள் திரை மூடியிருந்த சாந்தியின் படத்தை வெறிகொண்டு நோக்கின. கையைக்கூட அசைக்க சக்தியில்லாமல் இருந்த செல்வம் வெறி பிடித்தவன்போலப் பாய்ந்தான் படத்தின் முன்பு. ' படீர் ' என்று அறுந்தது படத்தை மூடியிருந்த திரை. செல்வம் தன் விழி பிதுங்கிய கண்களால் கடைசியாகத் தன் கடைசிப் படத்தைப் பார்த்தான். ஆவேசமாகப் பாய்ந்த செல்வம் அப்படியே சாய்ந்தான் படுக்கையின்மேல்.

செயல் மறந்து நின்ற வேணு படத்தைப் பார்த்துக்கொண்டே நடுக்கத்துடன் " ஆ! இவள் யார் என்றான்.

* * * *

" சத்தியாக்கிரகி " என்றன சிறைச்சாலைச் சுவர்கள்.

" சாந்தி " என்றன செல்வத்தின் உணர்விழந்து உலர்ந்த உதடுகள்.

---

Printed by V. Rajammal at [illegible] Press, 12, Ganapathi Mudali Street, Royapettah. Published by G. Ramasami, 34, Vaithiyanatha Mudali Street, Chetpet, Madras. Editor : A. M. Paramasivanandam.

# உங்களுக்கு எது தேவை?

| | |
|---|---|
| மேக்ஸ்வெல் | ஆயில் எக்ஸ்பெல்லர் |
| ,, | ரோட்டரி ஆயில் மில் |
| ,, | பின்டோ ஆயில் மில் |
| ,, | மாவு மில் |
| மாக்ஸ்வெல் | கருப்பாலைகள் |
| ,, | டிகார்டி கேட்டர் (கல்யாஸ்டைப்) |
| | ரைஸ் ஹல்லர்கள் |
| | சீயக்காய் மிஷின் |
| | தண்ணீர் பம்புகள் |
| | எலக்ட்டிரிக் மோட்டார் |
| | பம்ப் வகையறுக்கள் |

ஹேர், காட்டன், ரப்பர் பெல்டுகள், ரிங் ஆயிலர் பேரிங்குகள், அஸ்பஸ்டா முதலிய சகல மிஷின்களுக்கும் ஸ்பேர் சாமான்கள் முதலியன கிடைக்குமிடம்:

போன்: 3472

தந்தி: "நவஸ்டார்"

## மதராஸ் மில் ஸ்டோர்ஸ்

302, லிங்கி செட்டி தெரு, P. B. 174

ஜி. டி. மதராஸ்-1


Cover Printed by Shakti Press Ltd., (Shanti Press) Madras 14